விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 09 ஞாயிற்றுக்கிழமை (23.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

24 மணி நேரமும் படையினர் ரோந்து

# யாழில் நடக்கும் வன்முறைக்கு விரைவில் முடிவு கட்டப்படும்!



## யாழ்.படைத்தளபதி ஹத்துருசிங்க அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் வன்முறைகள் விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும் என யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். இதற்காக நேற்று இரவு முதல் படையினர் வீதி ரோந்து நடவடிக்கைகளை அனைத்துப் பகுதிகளிலும் ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை அமெரிக்கா பொறுத்திருந்து பார்க்கிறது

## ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதில்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில், குற்றங்களுக்கு பதில் கூறும் கடமை இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியம் என அமெரிக்கா சுட்டிக்காட்டி உள்ளது.

அத்துடன் அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவை அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் எவரும் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரி பி.ஜே.குரோலி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு கடுமையாக எச்சரியுங்கள்-வைகோ

(சென்னை)

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருவதாகவும் இது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் கடுமையான எச்சரிக்கை விடுக்க வேண்டும் எனவும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ கேட்டுள்ளார்.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து (19ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.நிபுணர் குழுவுடன் அரசு பேச்சு நடத்தாது!

## ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுடனான நேரடிப் பேச்சுக்களை அரசாங்கம் துண்டித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இந் நிபுணர் குழுவின் இலங்கைக்கான விஜயமும் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாக இவ்வதிகாரிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் தமது பிரச்சினைகளை படையினருக்கு தெரிவிக்கலாம்

## தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த படையினர் 24 மணி நேர சேவையை வழங்கவுள்ளனர்.

இவ்வாறு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் தமக்கு அச்சுறுத்தலாக அமையும் எப் பிரச்சினையாக இருந்தாலும் தொலைபேசி மூலம் (20ஆம் பக்கம் பார்க்க)

## சுங்கத் திணைக்களப் பணிகள் நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் சுங்கத் திணைக்களப் பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பிரதம தபாலக மேல் மாடியில் (20ஆம் பக்கம் பார்க்க)

INDIA
Rs. 2/-
செக்கன் அடிப்படையிலான
கட்டண அறவீடு
MY10 + 5 IDD இனை
செயற்படுத்த அழையுங்கள் 676
அல்லது ரூ. 177/- ற்கு
ரீலோட் செய்யுங்கள்
Dialog

# கொள்ளையர்களிடம் ஆயுதம் களத்தில் குதிக்கிறது விசேட புலனாய்வுப்பிரிவு



## பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றது. கொள்ளையர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. எனவே இவற்றைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட புலனாய்வுப் பிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளதாக பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் ஒப்பிடும் போது (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யூனிவேர்சல் கல்வி நிலையத்திற்கு நேற்றிரவு தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையத்திற்கு நேற்றிரவு விசமிகளால் தீவைத்து எரியூட்டப்பட்டுள்ளது.

இதனால் கல்வி நிலையத்தின் இரு கொட்டில்களின் கூரைகள் முற்றாக எரிந்ததுடன்தளபாடங்களும்தீயினால் சேதமடைந்தன.

கல்வி நிலையம் எரிவதனை அவதானித்த அரசடி வீதியால் சேவையில்ஈடுபட்டிருந்த யாழ்.மாநகர சபையின் பஸ் சாரதி உடனடியாக மாநகரசபையின் தீயணைப்புப் படையை அழைத்தார். அவர்கள் தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் யாழ்.கன்னாதிட்டி சயன்ஸ் ஹோல் கல்வி நிலையம் விசமிகளால் எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# சிவில் விவகார அலுவலர்கள் தொலைபேசி இலக்கங்கள்

| இடங்கள் | பெயர் | தொலைபேசி | கைத்தொலைபேசி |
|---|---|---|---|
| யாழ்.நகரம் | கேணல் ஏ.டபிள்யூ.டபிள்யூ பெரேரா | | 0773887124 |
| யாழ்.நகரம் | லெப்.கேணல் வடுகொட | 0212229899 | 0772910943 |
| யாழ்.நகரம் | மேஜர் ஆர்.பி.பி.நாணயக்கார | 0213207572 | 0718063166 |
| உயர் பாதுகாப்பு வலயம் | லெப்.கேணல் ஏ.பி.எஸ்.எக்கநாயக்க | | 0777276730 |
| யாழ்ப்பாணம் | லெப்.கேணல் இ.எச்.எஸ்.ஆர்.சில்வா | | 0773826866 |
| அச்செழு | லெப்.கேணல் அபயகுணசேகர | | 0716848296 |
| அரியாலை | லெப்.கேணல் எஸ்.ரணசிங்க | | 0773172958 |
| உடுவில் | லெப்.கேணல் ஜி.எஸ்.அமரசிங்க | | 0777752269 |
| வரணி (வடக்கு) | லெப்.கேணல் எச்.எஸ்.லக்ஸ்மன் | | 0772613007 |
| பருத்தித்துறை | மேஜர் என்.டி.நந்தனகுமார | | 0772666107 |
| மீசாலை (வடக்கு) | மேஜர் எல்.ரண்சகொட | | 0773706296 |
| நுணாவில் | லெப்.கேணல் அபேவர்தன | 0213211009 | 0718748300 |
| கட்டைக்காடு | லெப்.கேணல் டி சில்வா | 0213211214 | 0772539891 |
| சம்பியன்பற்று | மேஜர் யூ.எஸ்.ஏ.குலசிங்க | | 0716832832 |

# வடக்கில் 5ஆயிரம் தமிழ் பொலிஸ் புதிதாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை

## வர்த்தமானி அறிவித்தல் விரைவில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 5ஆயிரம் தமிழ் பொலிஸாரை புதிதாக ஆட்சேர்ப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குமாகாணத்தில் புதிதாக 5ஆயிரம் தமிழ் பொலிஸாரை ஆட்சேர்ப்புசெய்வதற்கு பொலிஸ்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில் பொலிஸ் அலுவலகர் தொடக்கம் பொலிஸ் கான்ஸ்டபிள் வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை விரைவில் பொலிஸ் திணைக்களம் வெளியிடும் எனவும் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் யாழ்.மாவட்டத்திலிருந்து பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 300க்கு மேற்பட்ட தமிழ் பொலிஸார் பயிற்சியின் பின்னர் கடந்த வாரம் முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடைமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஒக்ஸ்போர்ட்டில் பான் கீ மூனின் உரை!

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டின் Cyril Foster ஞாபகார்த்த உரையை ஆற்றவுள்ளார்.

பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் மனிதப் பாதுகாப்பும் 21ஆம் நூற்றாண்டின் ஐக்கிய நாடுகள் சபையும் எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இதற்கு முன்னதாக Cyril Foster ஞாபகார்த்த உரையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக பணியாற்றிய கொபி அனான் உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக பணியாற்றி மூவர் ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலங்கையின் முன்னேற்றத்தை சர்வதேசம் பொறுக்குதில்லை

## அமைச்சர் பசில் உரை

சர்வதேச சமூகத்தின் முன் வெற்றிகரமான அரசாங்கமாக மேம்பட்டு வரும் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். எவ்வாறாயினும் பொதுமக்களால் இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியாக இலங்கை தலைநிமிர்ந்து இருப்பதை பொறுத்துக்கொள்ள முடியாத வெளிநாடுகள் பல தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி நாட்டை பின்தள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு சவாலுக்கும் வெற்றிகரமாக முகம்கொடுக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## வாரணம் எவ்.எம். மாத இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இணைய வானொலி வாரணம் எவ்.எம் ஏற்பாட்டில் வாரணம் மாத இதழ் வெளியீடும், இதழியல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று காலை 10மணிக்கு இல. 20 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

ஊடகவியலாளர் ஐயா சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் பிரதம விருந்தினராகவும், வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

20.01.2011 முதல் 25.01.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-2199)

## தேவை

எமது தையல் நிலையத்திற்கு வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை 23.01.2011 தொடக்கம் 25.01.2011 வரை காலை 10.00 மணியிலிருந்து 1.00 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

நியூ குறிஞ்சி தையல் நிலையம்
இணுவில் றோட், மானிப்பாய்.
T.P.No.:0779678682.

(3565)




## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

**பதவி வெற்றிடம்** **வாகனச் சாரதி**

01. சம்பளக் குறியீட்டு இல. :312 / 14
02. சம்பள அளவுத்திட்டம் :9700-80X10 85X10-11350
03. வயதெல்லை :18-45 வரை
04. விண்ணப்ப முடிவுத் திகதி :09.02.2011
05 தகைமைகள்
   5ம் வகுப்பு தராதரப் பத்திரமும், சாரதிக்கான அனுமதிப் பத்திரமும், 2 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.
06. சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
07. விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்' என்ற முகவரிக்கோ நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ 09.02.2011ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்றுறை.

(சி-2247)

## அலுவலகம் வாடகைக்கு

யாழ். நகரப் பகுதிக்கு மிக அண்மையில், கண்டி வீதியில் (A-9) தற்போது அலுவலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு மாடிக் கட்டிடம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் அல்லது வாடகைக்கு விடப்படும். சுமார் 5000 சதுர அடிகளைக் கொண்ட 4 பரப்பு காணியில் நல்ல நிலையில் உள்ள இந்த கட்டிடத்திற்கு 10 திற்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்தும் வசதியும் உண்டு. பெறவிரும்புவோர் நேரடியாகவே தொடர்பு கொள்ளவும். தொ.பேசி இலக்கங்கள்- 0773979388, 0776428502.

(சி-2243)



## உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழக பட்டப்படிப்பை யாழ் மண்ணிலேயே பெற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்..!

ஆம்.. ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் முழுமையான பட்டப்படிப்பை யாழ்மண்ணிலேயே குறைந்த செலவில், ஆனால் அதே சர்வதேச அங்கீகாரத்துடன் (UCG அங்கீகாரம்) பெற்றுக்கொள்ளலாம்.

நெகிழ்வு தன்மைவாய்ந்த கற்கைநெறி முழுமையாக இங்கேயே மேற்கொள்ளலாம், அல்லது 2+2 முறைமையின் கீழ் 2 வருடங்கள் சினேக் யாழ் வளாகத்திலும் மிகுதி 2 வருடங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளலாம்.



பொறியியல்துறை
(Engineering)



முகாமைத்துவம்
(Management)



தகவல் தொழில்நுட்பமும் கனணி கற்கையும்
(IT & Computing)

- குறைந்த, இலகு தவணை கட்டணங்கள்.
- உலகத்தரம் வாய்ந்த வசதிகள்.
- தரம் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்.
- உள்ளக பட்டப்படிப்பின் அங்கீகாரம்.

KKS Road, Maruthanamadam, Jaffna District.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

COLOMBO INTERNATIONAL NAUTICAL & ENGINEERING COLLEGE SRI LANKA

**CINEC**
**Jaffna Campus**
BRANCH OF CINEC MARITIME CAMPUS

வாழ்வில் கிடைக்கப்பெறாத அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

World Class Excellence in Education and Training www.cinec.edu

ADinnovations






எமது நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வருவதையிட்டு காகில்ஸ் புட்சிற்றி பெருமையடைகின்றது. நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் பெறுமதியை ஏற்படுத்துவதுடன் சமூகங்களுக்கு சக்தியை வழங்கி அவர்கள் தமக்கென சிறந்த பலமான எதிர்காலத்தை நோக்கி முன்செல்ல ஊக்கமளிப்பதே எமது நோக்கமாகும்.

யாழ் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன். அவர்களை மேலும் வலுவூட்டும் நோக்குடனேயே எமது விற்பனை நிலையங்களை மானிப்பாய் நகரிலும், யாழ். நகரிலுள்ள கன்னாதிட்டி றோட்டிலும் திறந்து வைத்துள்ளோம். இந்த வருடத்தில் குடாநாட்டில் மேலும் 5 விற்பனை நிலையங்களைத் திறந்து யாழ் மக்களின் இல்லத்தையும் இதயத்தையும் நோக்கி நெருங்கி வரவுள்ளோம்.

புத்தம் புதிய பழ வகைகள், காய்கறி வகைகள், மீன், இறைச்சி வகைகளையும், காகில்ஸின் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளையும், அங்கீகாரம் பெற்ற மருந்து வகைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

காகில்ஸ் புட்சிற்றியில் பொருட்களைக் கொள்வனவு செய்து விசேட விலைக் கழிவுகளையும், சீட்டிழுப்புகள் மூலம் பரிசுகளையும், வெகுமதிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

யாழ்ப்பாண மக்களை மலர்ந்த முகத்துடன் "வணக்கம்" கூறி வரவேற்கின்றோம்.

Cargills food city
வீடு செல்லும் போது

## பூநகரி ப.நோ.கூ.சங்க புதிய தலைவர் தெரிவு

(பூநகரி)

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய தலைவராக வி.சொர்க்கநாதன் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

இவரது நியமனத்தோடு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட மூவர் இயக்குநர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-84)

## வடமராட்சி பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து

# கிழக்கு மாகாணத்திற்கு வெள்ள நிவாரண பொருட்கள் அனுப்பிவைப்பு

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து பொதுமக்களிடம் சேகரித்த பொருட்கள் மட்டக்களப்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து இரண்டு பிரதேச செயலர்களும் கிராம சேவகர்கள் மூலமாகவும் மற்றும் பிரமுகர்கள் மூலமாகவும் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை சேகரித்து நான்கு பாரவூர்திகள் மூலமாக இன்று மட்டக்களப்பு அரச அதிபரிடம் கொண்டு சென்று வழங்கவுள்ளனர். இவர்கள் அரிசி, பால்மா வகை, பருப்பு, தண்ணீர் போத்தல்கள், பெரிய வெங்காயம், மிளகாய்த்தூள், பிஸ்கட் ஆகிய பொருட்களை எடுத்துச் செல்கின்றனர்.

வடமராட்சி பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் முதற்கட்டமாக தமது ஒருநாள் சம்பளத்தினை வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-19-24)

# அமெரிக்க யாழ்ப்பாணத் தகவல் நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க யாழ்ப்பாணத் தகவல் நிலையம் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டினிஸ் அம்மையாரால் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்நிலையமானது இலக்கம் 159, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சமூக செயற்பாட்டு நிலையத்தில் திறக்கப்படவிருக்கின்றது.

இந்நிகழ்விற்கு வருகைதரும் அமெரிக்கத் தூதுவர், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார், யாழ். ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோரை நேரில் சந்தித்து யாழ்.குடா நாட்டு நிலைமை குறித்து ஆராயவுள்ளார். (ஸ்ரீ-2)

# — கலை பண்பாட்டு விழா —

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி கலைபண்பாட்டு மன்றம் நடாத்தும் கலைபண்பாட்டுவிழா சி.வை. தாமோதரம்பிள்ளை அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சிறுப்பிட்டி வடக்கு கலைவாணி சன சமூக நிலைய மைதானத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர். வே.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர்.எஸ். சிவலிங்கராசா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நினைவு பேருரையினையப் பான் கச்சுயின் பல்கலைக்கழக ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். சிறுவை கலைபண்பாட்டு மலரை யாழ்.பல்கலைக்கழக கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி வெளியிட்டு வைக்க முதற்பிரதியை மு.மௌலீசன் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் ஆய்வுரையை ஆசிரிய ஆலோசகர் செ.விசுவலிங்கம் வழங்கவுள்ளார்.தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு, பரிசில் வழங்கல், கலைநிகழ்வுகள் ஆகியன இடம்பெறும். (ஸ்ரீ-9-70)

# வாரம் ஒரு தகவல்

## யாருக்குச் சொந்தம்?

"வக்கீல் சேர், உங்களைத்தான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்"

"வாங்க உட்காருங்க. உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டும் சொல்லுங்க"

"முதலில் உங்களிடம் சில சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்."

"கேளுங்க"

"ஒரு பொருளை ஒருத்தர் திருடி அதை இன்னொருத்தர் காசு கொடுத்து வாங்கி விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதன்பின் அது திருட்டுப் பொருள் என்பது எல்லோருக்கும் தெரிந்து போகிறது. இப்பொழுது அந்தப் பொருள் யாருக்குச் சொந்தம்? பறிகொடுத்தவருக்கா? அல்லது திருடனிடம் இருந்து காசு கொடுத்து வாங்கினவருக்கா?"

"ஒரு பொருளைத் திருடுவதும், திருட்டுப் பொருளை வாங்குவதும் குற்றம். பறிகொடுத்தவருக்குத்தான் பொருள் போய்ச் சேரவேண்டும். இதில் இன்னொரு விடயம் தெரியுமா?"

"என்னது?"

"பிரிட்டனில் உள்ள சட்டப்படி ஒரு பொருள் அதன் நியாயமான உரிமையாளருக்கே சொந்தமானது. அது எத்தனை கைகள் மாறினாலும், யாரிடமிருந்து அது வந்ததோ, அவரிடமே அது போய்ச் சேரவேண்டும். ஆனால், ஜப்பான் மாதிரி சில நாடுகளில் கடைசியாக பொருளைக் காசு 'கொடுத்து வாங்கியவருக்குத்தான் அந்தப்பொருள் சொந்தம்.

"அப்படியா?"

"ஆமாம். இவ்வளவு தூரம் எதற்கு விசாரிக்கிறீங்க?"

"நான் ஒரு சிக்கலில் மாட்டியிருக்கிறேன்.எனக்காக நீங்கள் நீதிமன்றில் வாதாடவேண்டும்."

"வாதாடுகிறேன். பீஸ் எவ்வளவு தருவீங்க?"

"ஹி..... தற்சமயம் கையில் பணமில்லை. என்னிடம் ஒரு பசுமாடு இருக்கிறது. சீமைப்பசு. நிறையக் கறக்கும். அதை உங்களிடம் கொடுத்து விடுகிறேன்"

"சரி, உங்கள் மீது என்ன வழக்கு இருக்கு..... அதைச் சொல்லுங்க"

"ஒரு பால் பண்ணையில் பசுமாட்டைத் திருடிய வழக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

23.01.2011
(தை 09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
சதுர்த்தி முன்னிரவு 7.18 மணி வரை
பூரம் மாலை 6.33 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணி வரை
சுபநேரம் 9.36-11.06 மணி வரை
சங்கடகர சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், ஆதவன் வழிபாடு ஆனந்தம் தரும், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவர்.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், தொழில்புரியும் இடத்தில் பெயரும், புகழும் கூடும், உறவினர் வழி உதவியுண்டு.

**மிதுனம்** இளைய சகோதரர் வழியில் அனுகூலமான நாள், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.

**கடகம்** தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**சிங்கம்** குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணைபுரிவர், திடீர் பயணம் உருவாகும், தேவையற்ற கற்பனைகள் வளரும்.

**கன்னி** உறவினரை அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், சில காரியங்களுக்காக கொஞ்சம் அலைய நேரிடலாம், சேமிப்பில் சிறிது கரையலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயரும், போட்ட திட்டங்கள் எளிதில் நிறைவேறும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், விருந்தினர் வருகையுண்டு, தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**தனுசு** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதியைத் தரும்.

**மகரம்** திருமால் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் சூழ்நிலை அமையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கணவன், மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரும், செல்வாக்கான நாள்.

**மீனம்** நினைத்த காரியங்களை எளிதில் முடிப்பீர்கள், பழைய கடன்களை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், நோய் குணமடையும், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 180 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 280 |
| தக்காளி | 90 | 80 | 80 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | -- | 80 | 100 | 90 |
| கரட் | -- | 120 | 180 | 140 |
| பூசணி | 25 | 40 | 40 | 35 |
| புடோல் | 70 | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 30-35 | 40 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | -- | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 90 | 120 | 160 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 250 | 200 | 220 | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 | 100 |
| பீற்றூட் | -- | 150 | 150 | 150 |
| கறிமிளகாய் | -- | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | -- | 160 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 220 | 130 |
| கீரை - 1 பிடி | 20-25 | 40 | 40 | 35 |
| தேசிக்காய் | 40-50 | 50 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-50 | 50 | 50 | 45 |

# வட மத்திய மாகாணத்தில் பலர் சிறுநீரக நோயால் பாதிப்பு

## வடமத்திய மாகாண சுதேச வைத்திய அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையமும் வடமத்திய மாகாண சுதேச வைத்திய அமைச்சும் இணைந்து நடத்திய ஆய்வு ஒன்றின்படி வடமத்திய மகாணத்தில் பரவி வரும் சிறுநீரக நோய்க்கான மூன்று காரணங்களை வெளியிட்டுள்ளது.

குளத்து நீரையும் அதனை அண்மித்த நீரையும் அருந்துதல்,மேற்படி நீரில் வளர்கின்ற கேஹிலை மற்றும் தாமரைத் தண்டு போன்ற தாவரங்களை உண்ணுதல்,மேற்படி நீரில் வளர்கின்ற மீன்களை தோள் அகற்றாது உண்ணுதல் ஆகியவையே எனத் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வடமத்திய, வடமேல் மாகாணங்களில் அதிகமானவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இவ் ஆய்விற்கு 700 பேர் உட்படுத்தப்பட்டதாகவும் இதில் ஆண்கள் 69 சதவீதம் என்றும் இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் பேராதனை பல்கலைக்கழக வைத்திய குழு ஒன்று மேற்கொண்ட ஆய்விலும் இதேவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்னும் தெளிவாக மேற்படி நீரில் வளரும் ஒரு வகை அல்காத் தாவரம் எனத் தெரிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி தம்மிக மெனிக்கே திஸாநாயக்கா தலைமையிலான குழு மேற்கொண்ட ஆய்வின் படி வடமத்திய மாகாணத்தில் உள்ள நீர் நிலைகளில் வளர்கின்ற நீல நிற பச்சை அல்காக்கள் (புளூகிறீம் அல்கா) உற்பத்தி செய்யும் ஒரு வகை நச்சுப்பொருளே சிறு நீரகப் பாதிப்பிற்கு காரணம் என முன்னர் தெரிவித்தனர்.

இதே அல்காக்கள் கிணற்று நீரிலும் ஊடுருவியுள்ளதாக அவ் ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு மெடி எயிட்ஸ் நிலையத்தில் நடைபெறும்.

இக்கழகத்தின் சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தலைவர் அறிவித்துள்ளார்.

## இலங்கையில் கடந்த வருடம் 34,105 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோய் காரணமாக கடந்த வருடம் 34 ஆயிரத்து 105 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 246 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாவட்டத்தில் 5ஆயிரத்து 942 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 957 பேரும் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 7 பேரும் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளனர். (ஸ்ரீ-2)

## வீதி சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துக்கு சிரமம்

(நவாலி)

நவாலி-சங்கரத்தை வீதி அண்மையில் தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப்பட்டது.

இவ்வீதியில் குறிப்பிட்ட ஒரு கிலோமீற்றர் தூரம் வரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. குறித்த வீதி மிக மோசமாக சேதமடைந்து மக்கள் போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பாகவுள்ளது.

கற்கள் பறிக்கப்பட்டு வீதி ஓரங்கள் செப்பனிடப்பட்ட போதிலும் வீதி புனரமைப்பு செய்யப்படாமை மக்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும் விசனத்[illegible] ஏற்படுத்தியுள்ளது.

(ஸ்ரீ-26)

## எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பெரும் அசௌகரியம்

(நவாலி)

மானிப்பாய் ப.கு.நோ.கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந் நிலையத்தில் எரிபொருள் இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள்.

சண்டிலிப்பாய் எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு செல்லும் பாதையில் மதகு திருத்த வேலைகள் நடைபெறுவதாலும் மானிப்பாயில் வேறு எரிபொருள் விற்பனை நிலையங்கள் இல்லாமையினாலும் வாகனங்களை நிறுத்திவிட்டு யாழ்ப்பாணம் சென்று பெற்றோல் வாங்கி வந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ் விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தட்டுப்பாடு இல்லாமல் சீரான விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஸ்ரீ-26)

## தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெறாது

### தமிழக பிராந்திய கடலோர பாதுகாப்பு தளபதி உறுதி

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து முதல்வர் கருணாநிதியுடன் கிழக்கு பிராந்திய கடலோர பாதுகாப்புப் படை தளபதி எஸ்.பி. சர்மா முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கை கடற் படையினர் தமிழக மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து முதல்வருடன் விவாதித்தேன். இந்தத் தாக்குதல் சம்பவங்களை நிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் கடலோர காவற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் மீது இனிமேல் எந்த விதமான தாக்குதல் சம்பவங்களும் நடைபெறாது என முதல்வரிடம் உறுதியளித்துள்ளேன். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்சினை குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி கடலோரக் காவற்படையின் உயரதிகாரிகளும் மத்திய அரசு உயரதிகாரிகளும் ஆலோசனை நடத்தியுள்ளனர் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## புலிகளுக்கு நிதி சேகரித்த அரசசார்பற்ற நிறுவனங்களின் சொத்துக்கள் இரத்து

தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக கனடாவில் நிதி சேகரித்த உலக தமிழர் பேரவை உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் சொத்துக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கான தீர்மானத்தை கனடா அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

9 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பயனாகவே இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்டோரியோ மற்றும் கிவ்பெக் பிராந்தியங்களில் இயங்கிய வந்த உலக தமிழர் பேரவை மூலம் வருடம் ஒன்றிற்கு 7 இலட்சத்து 63 ஆயிரம் டொலர் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் சேகரிக்கப்பட்ட நிதியில் பெரும்பாலான நிதி தமிழீழவிடுதலைப்புலிகளுக்காக மலேசிய கணக்கு ஒன்றில் வைப்பு செய்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஸ்ரீ-2)


# Meitro Pc Systems

175/3, Kasthuriar Road, Jaffna.




- Intel Dual Core 2.8 GHZ Processor
- G41 Intel CHIPSET MOTHER BOARD
- In Sound + VAG + LAN
- Ram 02GB DDR 2 800 MHZ
- 500 GB SATA HDD 7200 RPM
- 18.5" LED Monitor
- USB Optical Mouse
- USB KeyBoard
- Branded ATX Casing
- Power Supply
- DVD Writer
- Multimedia Speaker




- Intel Dual Core i3 3.06 GHZ Processor
- Intel DH55 MOTHER BOARD
- Built In Sound + VAG + LAN
- Ram 02GB DDR 3 1333 MHz
- 500 GB SATA HDD 7200 RPM
- 18.5" LED Monitor
- USB Optical Mouse
- USB Keyboard
- Branded ATX Casing
- Power Supply
- DVD Writer
- Multimedia Speaker




- Intel Dual Core 2.8 GHZ Processor
- Intel DG31 Intel CHIPSET MOTHER BOARD
- Built In Sound + VAG + LAN
- Ram 02GB DDR 2 1333 MHZ
- 500 GB SATA HDD 7200 RPM
- 18.5" LED Monitor
- USB Optical Mouse
- USB Keyboard
- Branded ATX Casing
- Power Supply
- DVD Writer
- Multimedia Speaker




FREE KASPERSKY INTERNET SECURITY-2011

(C-2244)



## இலங்கை சட்டக் கல்லூரி அனுமதி - 2011

### நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

கடந்த காலங்களில் மேற்படி பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்களை நடாத்திவரும் சட்ட ஆசிரியர்களால் விரிவுரைகள், கடந்தகால விடைத்தாள்களை உள்ளடக்கிய மாதிரிப் பரீட்சைகள், மதிப்பீடுகள் நடாத்தப்படும்.

தகைமை

1. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் (தமிழ் C, ஆங்கிலம் C ) உள்ளடக்கி 06 பாடங்களில் சித்தி
2. க.பொ.த (உயர்தர) பரீட்சையில்
   பழைய பாடத் திட்டமெனில் 04 பாடங்களில் சித்தி
   புதிய பாடத் திட்டமெனில் 03 பாடங்களில் சித்தி
3. வயதெல்லை: 35 வருடங்கள்

பதிவுகள் : சட்டவள நிலையம்( S.V.R என்ரபிறைசஸ்), கண்டி வீதி, கிளிநொச்சி.

தொடர்பு : 0213212682, 0777705963

(3564)

# யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் நல்லிணக்க பணிகள் மந்தகதியில்

## ரொபர்ட் ஓ பிளேக் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் நல்லிணக்க பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் திருப்தியடையக்கூடிய வகையில் காணப்பட்ட போதிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கைப் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்துள்ள போதிலும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஹூட்சன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசாங்கம் செயற்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து புதிய தகவல்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் வீரர்களை பணயக் கைதிகளாகக் கொண்டு தமது உறுப்பினர்களை விடுதலை செய்வதற்காக லக்ஸர் ஈ ஜான்கிவி தீவிரவாத அமைப்பு முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்துல் வஹாப் எனப்படும் ஒமர் என்பவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களை பணயக் கைதிகளாகப் பிடிக்கும் திட்டம் வெரிகிஸ்தானில் வைத்து தீட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 6 பாகிஸ்தான் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டதுடன் 5 இலங்கை அணி கிரிக்கெட் வீரர்கள் காயமடைந்திருந்தனர் (ஸ்ரீ-2)

# மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை

## அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த வயல் மற்றும் விளைச்சல் நிலங்களை பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியவாறு அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நிதியை ஒதுக்கி இருப்பதாக விவசாயப் பாதுகாப்புச் சபையின் தலைவர் திருமதி சுமன ஆரிய தாசா தெரிவித்துள் ளார்.

மீள் செய்கைக்காக நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித் துள்ளார்.

பிரதேச விவ சாய உத்தியோகத் தர்களின் உதவியு டன் இந்தப் பணி கள் மேற்கொள்ளப்படும் என கம நல சேவை ஆணையாளர் நாயகம் ரவீந்திர கேவா வித்தாரன தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பயிர் நிலங்கள் குறித்து பிரதேச செயலகங்கள் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளதுடன் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச் சித் திட்டங்களும் நடைபெறவுள்ளன.

வெள்ளத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய நெல்லினங்களை பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2-9)

# அவுஸ்திரேலிய யுத்தக் கப்பல் கொழும்பு வந்துள்ளது

(கொழும்பு)

எச்.எம்.ஏ.எஸ்.மெல்பேன் எனப்படும் அவுஸ்திரேலிய கடற்படைக்கு சொந்தமான யுத்தக் கப்பல் ஒன்று கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் யுத்தக் கப்பல் நேற்று முற்பகல் வருகை தந்ததாக கடற்படை பேச்சாளர் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

சகோதரத்துவ சுற்றுலாவாகவே இவ் விஜயம் அமைவதாகவும் இக் கப்பல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இலங்கையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கூட்டுறவுச் சங்க புதிய கிளை திறப்பு

(பூநகரி)

பூநகரி முழங்காவில் 19 ஆம் கட்டைச் சந்தியில் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை நிலைய மொன்று கடந்த 18ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வாரம் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பூநகரி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைகயைத் தொடர்ந்து பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் மக்கள் தேவையைக் கருத்திற் கொண்டு விரைவாக இக் கிளை நிலையத்தை திறந்து வைத்துள்ளனர்.

(ஸ்ரீ-3-84)

## இணக்க சபை விசாரணைகளில்

# புதிய மாற்றத்தை ஏற்படுத்த திட்டம்

(கொழும்பு)

இணக்க சபைகளில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் கொடுக்கல்- வாங்கல் தொடர்பான பிரச்சினைகளுக்கான எல்லையை 25 ஆயிரம் ரூபாவில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் ரூபாவிற்குட்பட்ட பெறுமதியுடைய பிணக்குகள் இதுவரை காலமும் இணக்க சபைகள் மூலமே தீர்க்கப்பட்டு வந்தன. இவ் எல்லையை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளையும் இணக்க சபைகள் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# வெளிநாட்டில் பணிபுரியவர்களுக்கு விசேட ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிபுரியும் பணியாட் களுக்கு விசேட ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலம் பேணல் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபட்டு வருகின்றது என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். வெளிநாட்டில் பணியாட்களாக பணிபுரிபவர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இவ் ஓய்வூதியத் திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொழும்பு வரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் உலகின் 31 முன்னணி கப்பல் நிறுவனங்கள் கொழும்புத்துறைமுகத்தில் சீரான சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்தமை மற்றும் கப்பல்களுக்கு அறவிடப்படும் காப்புறுதித் தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டமை ஆகிய காரணங்களால் கொழும்புத்துறை முகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டு வரும் துறைமுக நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததும் இலங்கை வரும் கப்பல்களின் எண்ணிக்கை மேலும் உயரும் எனவும் அவர் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# கட்டிட நிர்மாணத்துறை பணியாட்களுக்கான வெற்றிடங்கள்

யாழ்.குடாநாட்டிலும் வவுனியா மற்றும் கிளிநொச்சி நகர்களிலும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய கட்டிட நிர்மாண ஸ்தலங்களுக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பணியாட்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிட வசதிகள் உண்டு. தகுதியுடையோர் கீழ்வரும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் சமுகமளிக்கவும்.

* கட்டிட கணிய அளவீட்டாளர் (Quantity Surveyor) -04
  இத்துறைசார் தகுதியுடையவர்களும், அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* கட்டிட மேற்பார்வையாளர் (supervisors) -06
  N.C.T தகைமையுடன் அனுபவம் தேவை.
* களஞ்சிய பொறுப்பாளர் (Store Keeper) -04
* காவலாளிகள் (Security Guards) -06
* மேசன் தொழிலாளர் (Masons) -12
* தச்சுத்தொழிலாளர் (Carpenters) - 08
* மின் இணைப்பாளர் (Electricians) -04
* குழாய் நீர் பொருத்துநர் ((Plumbers) -03
* உதவி பணியாட்கள் (Laboures) - 25
* பார ஊர்தி ஓட்டுநர் (Drivers) - 02
* “டபிள் கப்” வாகன ஓட்டுநர் (Driver) - 01

*தொடர்புகட்கு:*

கிளை முகாமையாளர், அல்லது
வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி
பிறைவட் லிமிட்டெட்,
இல.23, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

முகாமையாளர்,
வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி
பிறைவட் லிமிட்டெட்,
பொதுவைத்தியசாலை சுற்றுவட்டவீதி,
வவுனியா.


(3558)

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

'குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு தாய்ப்பால் எவ்வளவு இன்றியமையாததோ, அதேயளவு அதன் மன



வளர்ச்சிக்கு தாய்மொழி இன்றியமையாதது. குழந்தை தன் முதல் பாடத்தைக் கற்பது தாயிடம் இருந்துதான். அப்படியிருக்க, குழந்தையின் உள வளர்ச்சிக்கு தாய்மொழி அன்றி, வேறொரு மொழி திணிப்பது தாய் நாட்டுக்குச் செய்யும் பெரிய பாவம் என்றே நினைக்கிறேன்' -அண்ணல் காந்தி அடிகள் தாய் மொழி குறித்துத் தீர்க்கமாகச் சொன்னது இது! அகிம்சை என்கிற ஒன்றை மட்டுமே அவர் போதித்ததாக நினைத்து, புத்தி மறந்துக்கிடக்கும் எம் தமிழன் ஆண்டுதோறும் ஜனவரி 25ஆம் திகதி மறக்காமல் அனுசரிக்கிறான், மொழிப்போர் தியாகிகள் தினமாக. இனத்தை மறந்தவன், மொழிக்காக விழுந்த பிணத்தை மறந்தவன்,தியாகிகள் தினத்தையாவது மனதில் வைத்திருக்கிறானே என மனதை தேற்றிக்கொள்ளலாம். 'நாளை என் மொழி அழியுமானால் இன்றே நான் அழிவேன்!' என உரக்கச் சொன்னான் அம்சத் என்கிற பற்றாளன். ஆனால் மொழியைக் காக்க தங்களையே அழித்துக்



மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம்

கொண்ட தாளமுத்து ராசேந்திரன், அரங்கநாதனை எல்லாம் அடையாளம் மறந்துவிட்டு, தினத்தை மட்டும் ஒப்புக்கு அனுசரிப்பது, நெஞ்சத்தை அறுத்துவிட்டு நினைவஞ்சலி செலுத்துவதுபோல் அல்லவா இருக்கிறது. தமிழ்மொழிக்காக தன் மூச்சு நிறுத்தியவர்களை நாம் எந்த அளவுக்கு இழிவுபடுத்துகிறோம் என்பதற்கு ஓர் உதா 'ரணம்' சொல்லவா தமிழர்களே... மொழிக்காக உயிர் விட்டவனின் மூச்சைக் கௌர விக்க சென்னையில் 'அரங்கநாதன் சுரங்கப்பாதை' என்று பெயர் வைத்தோமே... அதை இன்றைக்கு எப்படி உச்சரிக்கிறார்கள் தெரியுமா? 'அரங்கநாதன் சப்-வே' என்று... தமிழுக்காக உயிர்விட்டவனை ஆங்கில வார்த்தைகளால் அடையாளப்படுத்தும் ஈனத் தனத்தை வேறு எந்த இனத்திலாவது கண்டிக்கிறீர்களா?

தாளமுத்துவின் கல்லறையை என்றைக்காவது கண்டிருக்கிறீர்களா தமிழர்களே...அது இப்போது கல்லறையாக இல்லை.. கழிவறையாக! மொழிப்போரில் முளைத்த எழுச்சியை வைத்து ஏற்றம் கண்டவர்கள் அந்தத் தியாகிகளின் பக்கம் திரும்பிக்கூடப் பார்ப்பது இல்லை.

தாய்மொழியைப் பற்றிப் பேசினாலே 'தமிழ்ப் பாசிசம்' எனப் பாய்பவர்களே.. 'இது தமிழர்கள் நாடு. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஆதிக்குடிகளே இந்த மண்ணைஆண்டு இருக்கிறார்கள்!' இதை நான் சொல்லவில்லை.புரட்சியாளர் அம்பேத்கரும் மூத்த தோழர் ஜோதிபாசுவும் சொல்லி இருக்கிறார்கள். இமயம் வரை எனது இனம் பரவி இருந்தது என்பதற்கு அங்கே புலிக்கொடி பறந்த உதாரணங்கள் போதாதா? எங்கள்

**12 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

முப்பாட்டன் சேரன் செங்குட்டுவன் பாட்டி கண்ணகிக்கு கோயில் கட்ட இமயத்தில் கல் எடுத்த வரலாற்றை! 'பாசிச' பட்டம் சூட்டுபவர்கள் மறுக்க முடியுமா? ஊரான்வீட்டுக் கல்லை எங்கள் பாட்டன் தொட்டு இருக்க முடியுமா? இமயம் வரை விரவி இருந்த எங்கள் இனம் எப்படியடா இப்படிச் சுருங்கிப் போனது? மொழித் திரிபும் மொழிக் கலப்பும் எங்களை இந்த அளவுக்கு முடக்கி விட்டதே... கருவியை ஆயுதம் என்றோம். கோயிலை ஆலயம் என்றோம். மகிழ்ச்சியை சந்தோஷம் என்றோம். மலரை புஷ்பம் என்றோம். மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளை சமஸ்கிருதக் கலப்பில் இருந்து பிரித்துப் பார்த்தால் எங்களுடைய தூய தமிழ் தும்பைப்பூவாக வீசுமே... எங்கள் முப்பாட்டன் சேரனின் வாரிசுகளை மலையாளி ஆக்கிவிட்டு நாங்கள் கொலையாளிகளாகத் தவிக்கிறோமே... எங்கள் மொழியின் முகத்தில் விழுந்த காயங்களைச் சொன்னால் அது தமிழ்ப் பாசிசமா?

அறிவழகன், இளஞ்சேரன், புகழ்மாறன், கணியன், இனியன் என்கிற பெயர்கள் எல்லாம் இன்றைக்கு ரமேஷ். தினேஷ். சுரேஷ் என்று மாறிப்போகிற அளவுக்கு எங்கள் மொழி, கலப்புக்கு களமாகி விட்டதே...ஈழத்தில் இத்தனை பிணங்கள் விழுந்த போதும் 'தமிழர்கள் இறந்தார்கள்' என்றுதானே சொன்னார்கள். பர்மாவில் இருந்து துரத்தப்பட்டபோதும் மலேசியாவில் இருந்து விரட்டப்பட்டபோதும் தமிழர்கள் என்கிற அடையாளம் தானே அனைவராலும் அறியப்பட்டது. பிணமாகும்போதும் நாம் இனமாகத்தானே வீழ்கிறோம். ஆனால் உயிர்வாழும்போது சாதிக்கும் மதத்துக்கும் கொடுக்கும் பற்றை என்றைக்காவது மொழிக்குக் கொடுத்து இருக்கிறோமா? பாலில் தண்ணீர் கலந்தால் வாங்க மறுக்கும் என் தமிழ் சாதி அரசியில் கல் இருந்தால் ஒவ்வொன்றாகப் பொறுக்கிவீசி விட்டு சமைக்கும் என் தமிழ்குடும்பம் உயிருக்கு நிகரான மொழியில் மட்டும் ஊடுருவலையும் கலப்பையும் அனுமதித்தது அடுக்குமா தமிழர்களே? எது ஒன்றிலும் கலப்படத்தை விரும்பாத நாம் தாய்மொழிப் படத்தை தடுக்காமல் போனது ஏன்? தாயோடு பிறிதொரு ஆண் இருப்பதை நெஞ்சத்தால் எப்படி நினைத்துப் பார்க்க முடியாதோ...அதேபோல்தான் தமிழர்களே தாய்மொழியில் அந்நியம் கலப்பதும்!

இங்கே ஸ்ட்ரீட் இருக்கிறது. தெரு இல்லை. எக்ஸ்டென்ஷன் இருக்கிறது விரிவு இல்லை. ரோடு இருக்கிறது. சாலை இல்லை. போகவேண்டிய இடம் எங்கே இருக்கிறது எனக் கேட்டால் 'லெஃப்டில் கிராஸ் பண்ணி யுடேர்ன் அடிச்சா ஸ்பொட் வந்துரும்!' என பதில் சொல்கிறார்கள். அடக்கொடுமையே... வழிகேட்கும் இடத்தில் கூட நம் மொழி கேட்க முடியவில்லையே! வாய்மொழியாகக் கூட என் தாய்மொழியை இந்தத்



ரெங்கநாதன் சிவலிங்கம் சின்னசாமி ராஜேந்திரன்

தமிழகத்தில் கேட்க முடியவில்லையே.. மூளை நரம்புகளை முறுக்கேற வைக்க வேண்டிய இந்த வருத்தம் எந்தத் தமிழனிடத்திலும் முளைக்காமல் போனது ஏனய்யா?

ஒவ்வொரு தமிழனின் மண்டையிலும் மான உணர்வு மரித்துப் போனதற்குக் காரணம்... நாம் தண்ணீர் பருகுவது இல்லை. மாறாக வோட்டர் குடிக்கிறோம். சோறு உண்பது இல்லை ரைஸ் உண்கிறோம். காலையில் "குட் மோர்னிங்" இரவில் 'குட்நைட்" என்பதை வழக்கமாக்கிக்

## எவற்றிலும் கலப்படத்தை விரும்பாத நாம் தாய்மொழிக் கலப்படத்தை தடுக்காதது ஏன்?

கொண்டோம்!கோடிகளைக் கொட்டி செம்மொழி மாநாடு நடத்தியவர்கள், ஆறே மாதங்களில் வணிக நிலையங்களுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டப்படும் என சூளுரை சொன்னார்களே... இந்த நொடி வரை எங்கேயாவது தமிழ்ப் பெயர்களைத் தாங்கிய வணிகப் பலகைகளைப் பார்க்க முடிகிறதா? ஆனால், ஈழத்தில் அப்போதே அண்ணன் பிரபாகரன் வங்கியை "வைப்பகம்" என்றும் பேக்கரியை "வெதுப்பகம்" என்றும் மாற்றினார். 'வெதுப்பகம்' என்ற சொன்னப்ப சனங்க எல்லோரும் சிரிச்சாங்க தம்பி... ஆனால், இப்போது பேக்கரி என்று சொன்னா சிரிப்பாங்க தம்பி. நாம் உறுதி எடுத்தால் நிச்சயம் நிலைமை எல்லாம் மாறும்!' என அண்ணன் சொன்ன வார்த்தைகள் மறக்கக் கூடியவையா?

அண்ணன் தமிழ்ச் செல்வனின் இயற்பெயர் தினேஷ். ஒரு திருமண நிகழ்வுக்கு தமிழ்ச்செல்வனோடு தலைவர் போய் இருக்கிறார். அப்போது தமிழ்ச் செல்வனின் தமிழாசிரியை தலைவரிடம் தமிழ்ப் பெயர்களின் அவசியம் குறித்து வலியுறுத்தி இருக்கிறார். அப்போதே துடித்துப் போன அண்ணன் பிரபாகரன் 'இயக்கத்தில் இருப்பவர்கள் முழுதும் தமிழின அடையாளத்தோடு மட்டுமே இருங்கள்' என ஓர் உத்தரவு போட்டார். போராளிகள், தலைவர்கள், தளபதிகள் பெயர்கள் எல்லாம் அன்றைக்கே தமிழ்ப் பெயராயின! மாற்ற முடியும் என்கிற மன உறுதியும் மாற்ற வேண்டும் என்கிற நோக்கமும் தமிழகத்தை ஆண்ட- ஆளும் தலைவர்கள் எவருக்குமே இல்லாமல் போனது ஏன்? கர்நாடகத்தில் ஆங்கிலப் பெயரைத் தாங்கி வணிகப் பலகைகள் இருந் தால் அங்கே ஓடிச் செல்லும் கன்னட அமைப்பினர் அப்போதே ஆங்கிலப் பெயரை அழித்து கன்னடத்தில் எழுதுகிறார்கள். அந்த இடத்திலேயே அந்த நிறுவனத்துக்கு அபராதம் போடுகிறார்கள். அதற்கு பொலிஸாரும் துணையாகத்தானே நிற்கிறது. அதையொத்த வீரம், இந்த அன்னை மண்ணில் எவருக்குமே ஏற்படாதது ஏனய்யா தமிழர்களே? ரஷ்யாவில் இருந்து பிரிந்த லார்வியா நாட்டில் அவர்களின் தாய்மொழியில் ரஷ்ய மொழியின் கலப்பு இருந்திருக்கிறது. அதைத் தடுக்க அந்த நாட்டில் சீருடை இல்லாத காவலர்களை நியமித்து ரஷ்ய மொழியைக் கலந்து பேசுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். சட்டம் போட்டு மொழியைக் காக்கத்துடிக்கும் நாடுகளுக்கு மத்தியில் நாம் திட்டம் போட்டு ஆங்கில மோகம் பிடித்து அலைவது நியாயமா தமிழர்களே? ஆங்கிலம் என்பது அறிவு என நினைக்கும் அதிமேதாவிகளே! அமெரிக்காவில் ஆடு மேய்ப்பவனும் பிரிட்டனில் பிச்சை எடுப்பவனும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவது அறிவின் உச்சமா? இங்கிலாந்தின் காலடியில் வாழும் ஜேர்மனும் பிரான்ஸும் தங்கள் மொழியில் ஆங்கிலக் கலப்பை இன்றைக்கும் அனுமதிக்கவிடாமல் கட்டிக்காக்கையில் 50 ஆயிரம் ஆண்டுகள் பாரம்பரியச் சிறப்புக்கொண்ட நம் தமிழ் மொழியை பாழாக்கித் தவிக்கிறோமே! ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக இருந்த வரை தவறு இல்லை. ஆனால் ஆங்கிலமே பயிற்று மொழியாகி தமிழ் மொழிப்பாடாக மாறிய துயரத்தை மறத்தமிழன் மறந்தும்கூடத் தட்டிக்கேட்கவில்லையே! தாய்த்தமிழ்ப் பள்ளிகளை அங்கீகரிக்க மறுக்கும் இந்தத் தமிழக அரசு ஆங்கிலப் பள்ளிகளுக்கு ஏகபோக அங்கீகாரத்தை அள்ளி விடுகிறதே...உண்மையில் பார்த்தால் கலப்பாலும் திணிப்பாலும் கதறிக்கிடக்கும் தமிழைக்காக்கத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை இந்த அரசாங்கம்தானே முன்னின்று நடத்தி இருக்க வேண்டும்.?!

'ஸோ' என்று சொல்லாமல் நமக்கு சோறு இறங்குவது இல்லை. 'அக்ச்சு' வலி இல்லாமல் நாம் எதையும் ஆரம்பிப்பது இல்லை. அன்பை வெளிப்படுத்தக்கூட 'ஐலவ் யூ' தானே! சேர் ,சேர் என்றுதான் மோர் ஊற்றுகிறோம்... 'மேடம்,மேடம் எனச் சூடம் காட்டுகிறோம்! 'வெள்ளைக்காரா எங்களை அடிமைப்படுத்த நீ தேவை இல்லை. உன் மொழியே போதும். அதை விட்டுவிட்டுப் போ' எனச் சொன்னவர்களாக- சொரணையற்றவர்களாக அந்நிய மொழியில் நாம் சொக்கிக்கிடக்கிறோம் தமிழர்களே... சுதந்திரம் வாங்கியவர்களாக சொல்லிக்கொண்டாலும் இப்போதும் நம்மை வெள்ளையர்கள்தான் ஆள்கிறார்கள். அன்றைக்கு நாட்டை... இன்றைக்கு நாக்கை! (தொடரும்)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் காத்தான்குடி பொலிஸில் சரணடைந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை சரணடைந்த பிரசாந்தனும் மற்றும் 5 பேரும் அன்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதிவான் என்.எம். அப்துல்லா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது, தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல பிரசாந்தனுக்கு நீதவான் அனுமதி வழங்கினார்.

ஏனைய 5பேரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவு வழங்கினார்.

ஆரையம்பதி பிரதேச செயலாளரை அச்சுறுத்தியமை, கிராம சேவையாளர் சுரேஸை அச்சுறுத்தியமை, ஆரையம்பதி பிரதேச செயலக ஊழியர் பைரூஸை தாக்கியமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வழக்கு நாளை திங்கட்கிழமை மீண்டும் விசாரிக்கப்படவுள்ளது. சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி யூ.அப்துல் நஜீம் ஆஜராகியிருந்தார்.

இதேநேரம் பிரதேச செயலகம் தாக்குதலுக்குள்ளானதை கண்டித்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ஊழியர்கள் மற் றும் பொது மக்க ளினால் இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கவிருது- 2010/2011 'காந்தீயம்' இதழுக்கு கிடைத்துள்ளது.கடந்த 5ஆம் திகதி கொழும்பு ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் ஆறாவது மாநாட்டில் இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை திருவண்ணாமலை 'கருதகேவலி' இதழலாளர் பார் சுபநாதன் மற்றும் தமிழ்த் தொண்டாளர் புரவலர் ஹாசிம் உமர் இணைந்து 'காந்தீயம்' இதழாசிரியர் எம்.சாந்தன் சத்தியமூர்த்திக்கு வழங்குவதையும் அருகில் பேராசிரியர் சபா.ஜெயராசா மற்றும் உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தலைவர் வதிலை பிரபா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை விஜயத்துடன் சாட்சியப் பதிவுகள் நிறைவு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்துக்கான விஜயத்துடன் பொது மக்களிடமிருந்து சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கையை ஆணைக்குழு நிறைவு செய்யவுள்ளதாக ஆணைக் குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமராச்சி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை எதிர்வரும் 31 ஆம் திகதியோடு நிறைவு செய்ய தீர்மானித்திருந்தோம்.எனினும் கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டதனாலேயே சாட்சியப்பதிவுக்கான காலம் நீடிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களால் வழங்கப்பட்ட சாட்சியங்களைக்கொண்டு இறுதி அறிக்கையை தயாரிப்பதற்காக நீண்டகாலம் தேவையென்பதனாலேயே அம்பாறை மாவட்டத்துக்கான விஜயத்துடன் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை நிறைவு செய் யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அம்பாறை மாவட்ட விஜயம் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவு நடவடிக்கை நிறுத்தப்படுவதன் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தலைவர் இரா.சம்பந்தன் போன்ற பல முக்கிய தலைவர்கள் சாட்சி யமளிக்க சந்தர்ப்பம் கிடைக்காமல் போக லாம் என ஆணைக்குழுவின் உயர் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மே மாதம் அளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா தலைமையில் 8பேர் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வருடம் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்பக் கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாராச்சி சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்ததையடுத்து நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்ப ஒருவரை நியமிக்கும்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கொட தேர்தல் ஆணையாளரை எழுத்துமூலம் கோரியுள்ளார்.

ஏற்கனவே, விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பொன்சேகாவுக்கு அடுத்ததாகவிருந்த லஷ்மன் நிபுணாராச்சியின் பெயரை தேர்தல் ஆணையாளர் முன்மொழிந்தார்.

சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரால் முன்மொழியப்பட்டவர் சபாநாயகர் முன்னிலையில் மூன்று மாதத்திற்குள் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும்.

எவ்வாறாயினும் கடந்த ஜனவரி 14 ஆம் திகதியுடன் மூன்று மாதம் கடந்துவிட்ட நிலையில் நாடாளுமன்ற ஆசனத்திற்கு வெற்றிடம் உள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நிபுணாராச்சிக்கு அடுத்ததாக ஜயந்தகேட்கொட உள்ளார். (ஸ்ரீ-2)


## தேவை

**கடற்கரையை அண்மித்த காணி, காரியாலய இடவசதி மற்றும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள காணி உடனடியாகத்தேவை.**

ஹோட்டல் செயற்றிட்டங்கள் மற்றும் காரியாலய இடவசதிக்கான கடற்கரைக்கு முகப்பாக அமையப்பெற்ற காணி மற்றும் யாழ்குடா நாட்டின் மத்தியில் அமையப்பெற்ற காணி ஆகியன உடனடியாக தேவைப்படுகின்றன. தங்களின் காணி பற்றிய விபரங்களை அறியத்தரவும். மேற்படி இடங்களை பார்வையிடும் பொருட்டு ஜனவரி 21ஆம் திகதி முதல் 23 வரை ஹோட்டல் 'டில்கோ' மற்றும் யாழ்ப்பாண சர்வதேச சந்தையில் இல.149 மற்றும் 150 இல் அமைந்துள்ள 'மெக்வூட்' காட்சியறையிலும் நாம் பிரசன்னமாயிருப்போம்.

தொடர்புகளுக்கு :
சுதீன் : 0778424248
வித்யா : 0774632726
தொலைநகல் : 0115338024
மின்அஞ்சல் : projects@mackwoods.com


# வெள்ளத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு நோர்வே அரசாங்கம் நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்த மக்களுக்கு நிதி உதவி வழங்க நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கமைய 60 இலட்சம் நோர்வே குரோனை வழங்கத் தமது அரசாங்கம் முன்வந்துள்ளதாக நோர்வேயின் சுற்றாடல் மற்றும் உள்துறை அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் உள்ள மக்களுக்கான சுத்தமான குடிநீர், உணவு மற்றும் இருப்பிட வசதிகள் இந்த நிதி மூலம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி உதவி ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் மற்றும் நோர்வே அகதிகளுக்கான சபையின் ஊடாகவே வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்த இர ண்டு அமைப்புக் களும் ஏற்கனவே வெள்ளத் தினால் பாதிப்படைந்த பிரதேசங்களில் தமது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# மலைநாட்டில் நிலநடுக்கம்; 10 நிமிடங்கள் வரை நீடிப்பு

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதி மக்களால் உணரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்டியை அண்மித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் முற்பகல் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக அப்பிரதேசப் பாடசாலையொன்றும் நேரகாலத்துடன் மூடப்பட்டிருந்தது.

அத்துடன் கண்டியை அண்மித்த கட்டுகலை பிரதேசத்தில் கடும் நிலநடுக்கத்தை சுமார் பத்து நிமிடங்களுக்கும் மேலாக உணர முடிந்ததாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டி சித்திலெப்பை வித்தியாலயத்திலும் நிலநடுக்கம் பலமாக உணரப்பட்டதன் காரணமாக அப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உடனடியாக மாணவர்களை பாடசாலைக் கட்டடங்களுக்கு வெளியில் அழைத்து வந்துள்ளனர்.

இதுகுறித்து பாடசாலையின் அதிபர் தமீம் தெரிவிக்கையில்,

நேற்றுமுன்தினம் முற்பகல் திடீரென பாடசாலையின் கூரையில் ஹெலிகொப்டர் ஒன்று இறங்குவதைப் போன்ற பாரிய சத்தம் கேட்டது.

அதனையடுத்து பாடசாலையின் கட்டடங்கள் அசையத் தொடங்கின. திடீரென்று நின்று போன நிலநடுக்கம் மீண்டும் ஆரம்பமானது. நாங்கள் உடனடியாக மாணவர்களை வகுப்பறைகளிலிருந்து வெளியே அழைத்து வந்தோம் என்று கூறினார்.

நிலநடுக்க அச்சத்தின் காரணமாக பாடசாலை நேரகாலத்துடன் மூடப்பட்டதுடன், நிலநடுக்கம் பற்றி பேராதனை புவிச்சரிதவியல் ஆய்வுத் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்கு வைக்கும் இலங்கை ஆடைத்துறை

இலங்கையின் ஆடைக் கைத் தொழில் துறையின் மூலம் 2015 ஆம் ஆண்டளவில் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டும் நோக்கில் புதிய துறை சார் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆடைக் கைத்தொழில் துறை திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, 2011-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

இலங்கையின் ஆடைக்கைத் தொழிலானது 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டித் தருமளவு பெரியதொரு கைத்தொழிலாகும். இதற்கு மேலதிக வசதிகளை வழங்குவதற்காக உட்துறைமுக வர்த்தக ஈடுபாட்டு இறக்குமதிகள், பதனிடல் மற்றும் மீள் ஏற்றுமதிகள், கப்பலேற்றல் வியாபாரங்கள் என்பவற்றினை ஆடைக் கைத்தொழில் ஊக்குவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்பான புடைவை, ஆடை மற்றும் தோற்பொருள் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் புடைவை, தோற்பொருள், பாதணிகள் மற்றும் பைகள் தயாரிப்புக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி தீர்வை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

முகாமைத்துவம், நிதி, வழங்கல் மற்றும் விலைப்பட்டியலிடல் செயற்பாடுகளுக்கான பிரதான கொள்வனவாளர்கள் தமது தலைமையகங்களை இலங்கையில் அமைப்பதை கவர்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது. அத்தகைய செயற்பாடுகளின் வெளிநாட்டு செலாவணி வருமானத்தினை வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நான் முன் மொழிகிறேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

2009ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேசிய ஏற்றுமதி வருமானத்தில் 46 வீதம் அதாவது 3 ஆயிரத்து 262 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆடைக் கைத் தொழில் துறையின் மூலம் பெற்றுக் கொள்ள முடிந்ததாக தேசிய கொள்கை வரைவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த ஏற்று மதி வருமானத்தில் பெருமளவு பங்கை வகிப்பது ஆடைக் கைத்தொழில் துறை என்பது குறிப்பிடத்தக்கது.






சிங்கர்(சிறிலங்கா) தலைவர் ஹேமக அமரசூரிய, சிங்கர் குழுமத் தலைமை நிறைவேற்று அதிகாரி அசோகா பீரிஸ் மற்றும் சிங்கர் பினான்ஸ் (லங்கா) தலைமை நிறைவேற்று அதிகாரி சாந்த விஜயவீர மற்றும் நிறுவன அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை கொழும்பு பங்குச்சந்தையில், சிங்கர் பினான்ஸ் வர்த்தகம் ஆரம்பமாவதை அவதானிப்பதை படத்தில் காணலாம்.

# ஊழியர் சேமலாப நிதிய மொத்த இருப்பு ரூ.௯௦௦ பில்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் தற்போதைய மொத்த இருப்பு 900 பில்லியன்(90 ஆயிரம் கோடி) ரூபாய் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் அதிகூடிய இருப்பு இதுவாகும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2004-ம் ஆண்டில் நிதியத்தின் இருப்பு 379 பில்லியன் ரூபாயாக இருந்தது. 5 வருடங்களில் இது இரண்டு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க வெற்றி என்று இலங்கை மத்திய வங்கியின் சேமலாப நிதிய திணைக்களத்தின் பிரதம அதிகாரி ரூபா வீரசிங்க கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டு சேமலாப நிதியத்தில் 20 இலட்சம் பேர் அங்கத்தவர்களாக இருந்தனர். தற்போது அது 23 இலட்சமாக அதிகரித்துள்ளது.

நிதியத்தின் 3/4 பகுதி இலாபம் வரும் வகையிலான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி அரசாங்க பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் வழங்குவதைவிட அதிக வட்டியை நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

| ஆண்டு | இருப்பு | அங்கத்துவ எண்ணிக்கை |
|---|---|---|
| 2004 | 379 பில்லின் ரூபாய் | 2 மில்லியன் |
| 2005 | 427 பில்லின் ரூபாய் | 2 மில்லியன் |
| 2006 | 490 பில்லின் ரூபாய் | 2.1 மில்லியன் |
| 2007 | 560 பில்லின் ரூபாய் | 2.1 மில்லியன் |
| 2008 | 653 பில்லின் ரூபாய் | 2.1 மில்லியன் |
| 2009 | 769 பில்லின் ரூபாய் | 2.1 மில்லியன் |
| 2010 | 900 பில்லின் ரூபாய் | 2.3 மில்லியன் |

# பங்குச் சந்தைக் கிளைகளின் நாளாந்த வருமானம் அதிகரிப்பு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கிளைகளின் செயற்பாடு சிறப்பான முறையில் உள்ளது. அத்துடன் அவற்றின் நாளாந்த வருமானமும் அதிகரித்துள்ளதாக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் இந்திராணி சுகததாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நீர்கொழும்பு கிளையின் சராசரி நாளாந்த வருமானம் 40.26 மில்லியன் ரூபாய். இக்கிளை 2009இல் 5.56 மில்லியனை பதிவு செய்திருந்தது. இது 624 வீத அதிகரிப்பாகும்.

இதேபோல் மற்றைய கிளைகளின் சராசரி நாளாந்த வருமானமும் முறையே, கண்டி 54.91 மில்லியன், மாத்தறை 52.37 மில்லியன், குருநாகல் 21.39 மில்லியன், யாழ்ப்பாணம் 1.39 மில்லியன் ஆக காணப்பட்டுள்ளது.

ஐந்து கிளைகளில் 4 கிளைகள் 200 வீதத்திற்கு மேல் வளர்ச்சியைப் பெற்றுள்ளன. 2009-ல் 9.14 மில்லியனை பெற்ற கண்டி கடந்த ஆண்டு 54.91 மில்லியனை அதாவது 501% அதிகரிப்பை அடைந்தது.



இதேபோல் 2009உடன் ஒப்பிடுகையில் மாத்தறை 438% முன்னேற்றத்தையும், குருநாகல் 2009 இல் 5.80 மில்லியனாகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டு 21.39 மில்லியனாகவும் அதிகரித்தது. இவ்வாறு கிளைகள் ஒட்டுமொத்தமாக 269% வளர்ச்சியைக் காட்டியுள்ளது என்றார்.

2010-ம் ஆண்டில் கொ.ப.பரிவர்த்தனையின் மொத்த சந்தைப் புரள்வில் மேற்படி கிளைகளின் பங்களிப்பு 7.1 வீதமாகும். இதில் யாழ்ப்பாணக்கிளை கடந்த ஏப்ரல் மாதமே ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பங்குத்தரகு நிறுவனங்களின் செயற்பாடுகள் சிறப்பான முறையில் உள்ளன. அதிகளவான மக்கள் பங்குப்பரிவர்த்தனையின் யாழ். கிளைக்கு வந்து பங்குச்சந்தை முதலீடு தொடர்பான விளக்கங்களைப் பெற்றுச் செல்கின்றனர் என கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபன் தெரிவித்தார்.

## கடைசியாக வந்த 9 ஆரம்ப பங்கு வழங்கல்கள் ஒரே பார்வையில்...

| கம்பனி | வழங்கல் விலை (ரூ.) | முதல்நாள் வர்த்தக விலை(ரூ.) | 21.01.2011 இல் விலை |
|---|---|---|---|
| ரேணுகா அக்ரி பூட்ஸ் | 2.25 | 3.70 | 6.70 |
| சிலோன் ரீ புரோக்கர்ஸ் | 2.00 | 4.50 | 5.20 |
| ரைகம் வயம்ப சல்ரரன்ஸ் | 2.50 | 4.20 | 4.10 |
| வலிபல் பினான்ஸ் | 22.00 | 30.25 | 110.60 |
| ஒடெல் | 15.00 | 32.50 | 46.00 |
| பிசி ஹவுஸ் | 11.00 | 11.00 | 22.90 |
| ஹைட்ரோ பவர் பிரீலங்கா | 10.00 | 15.60 | 18.00 |
| லாப் காஸ்-வாக்குரிமையுள்ளது | 23.00 | 26.50 | 50.00 |
| -வாக்குரிமையற்றது | 15.00 | 16.40 | 34.60 |
| சிங்கர் பினான்ஸ் லிமிட். | 15.00 | 49.20 | 49.20 |

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7032.60 | 7254.01 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7301.09 | 7292.95 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 15,458.83 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* இன்டோ மலே (1400.00), செலின்சிங் (960.00), போர்ட்லாண்ட்(360.20), சிங்கபுத்திரா பினான்ஸ் (124.90), சி.டி.பி.(81.30).

*சரிவடைந்த பங்குகள்(ரூ.):* லங்கா அசோக் (3033.30), ஹுஜே (55.50), லேக்கவுஸ் பிறின்டர்ஸ்(120.00), றோயல்பிளம்ஸ் (82.00), வட்டபொட(4000.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## யூனியன் வங்கி ஐ.பி.ஓ பெப்ரவரியில்

யூனியன் வங்கியின் ஆரம்ப பொது வழங்கல் (IPO) பெப்ரவரி மாதம் இடம்பெறுமென வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி அனில் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 21 கிளைகளைக் கொண்டுள்ள யூனியன் வங்கி, ஐ.பி.ஓ. மூலமாக 1.1 பில்லியன் ரூபாய் மூலதனத்தை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.18 | 111.90 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.61 | 178.79 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.49 | 151.94 |
| சுவிஸ் பிராங் | 113.09 | 116.71 |
| கனேடிய டொலர் | 109.62 | 113.27 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.67 | 111.24 |
| சிங்கப்பூர் டொலர் | 85.02 | 87.60 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.44 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.21 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கைத்தொலைபேசி எண்ணை மாற்றாமல் வேறு நிறுவனத்துக்கு மாறலாம்

இந்தியாவில், வாடிக்கையாளர்கள் கைத்தொலைபேசி எண்ணை மாற்றாமல், வேறொரு கைத்தொலைபேசி நிறுவனத்தின் சேவைக்கு மாறிக் கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில், மொபைல் அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்தியா முழுவதும் பி.எஸ்.என்.எல்., வோடபோன், ஏர்செல், ஏர்டெல், டாடா, ரிலையன்ஸ் உள்ளிட்ட 14 மொபைல் போன் சேவை நிறுவனங்கள் உள்ளன.

இந்நிலையில் மொபைல் போன் எண்ணை மாற்றாமல், வேறு மொபைல் போன் நிறுவனத்திற்கு மாறிக் கொள்ளலாம் என தொலைத் தொடர்புத்துறை அறிவித்துள்ளது.

# தை மாத இராசி பலன்கள்




(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)

*கொள்கைப் பிடிப்போடு செயற்பட வேண்டும் என்று சொல்லும் கும்பராசி நேயர்களே!*

நீங்கள் மற்றவர்களின் துயரங்களில் பங்குகொள்ள விரும்புவீர்கள். அதற்கு வடிகால் கூறுவதும் உங்களுக்கு வழக்கமாக இருக்கும். அரசியலையும், நாட்டுப் பிரச்சினைகளையும் அலசி ஆராய்வதில் உங்களுக்கு அதிக விருப்பம் உண்டு. பொறுப்புணர்ச்சி உங்களுக்கு அதிகமாகவே இருந்தாலும், பல்வேறு காரணங்களால் அதை செயற்படுத்த இயலாது. உங்களிடம் ஒரு தகவலைச் சொன்னால், அடுத்த நிமிடமே அதை அனைவரிடமும் சொல்லி விடுவீர்கள்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் சனி வக்ரம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். இராசிநாதனாகவும் சனி இருப்பதால், செலவு நடைகள் இருமடங்கானாலும், செய்யும் காரியங்கள் சிறப்பாக நிறைவேறும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால், எதிர்பாராத இக்கட்டுக்கள், இல்லத்தில் உள்ளவர்களுடன் சச்சரவுகள் என்று ஏதேனும் ஒன்று வந்து கொண்டே இருக்கும்.

விட்டுக் கொடுத்துச் செல்வதும், ஒத்துப் போவதும் தான் இக்காலத்தில் உங்களுக்கு இனிமையைச் சேர்க்கும். குரு விலகியதால் குழப்பங்கள் தீரும். என்றாலும், இராகு-கேதுக்களின் ஆதிக்கம், 5, 11 ஆகிய இடங்களில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே, அரவு கிரக வழிபாட்டினை முறையாக வைத்துக் கொண்டால், இரவு-பகல் பாராது உழைத்த உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

இம்மாதம் 26 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 8இற்கு அதிபதி புதன் 12இல் சஞ்சரிப்பது விபரீத இராஜ யோகத்தை உருவாக்கும். என்றாலும், 5இற்கு அதிபதியாகவும் புதன் இருக்கிறார். எனவே, பிள்ளைகள் வழியிலும் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலலாம். நல்லவர் என்று நம்பிக் கொடுத்த பணம் கூட, நிலுவையில் இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் பொழுது, கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மாமன் வழி ஒத்துழைப்பில் மாற்றம் ஏற்படலாம். சேமிப்பிலும் கொஞ்சம் குறையும்.

இம்மாதம் 30ஆம் திகதி தனுசு இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது உங்களுக்கு ஓரளவிற்கு நன்மைகளையே வழங்கும். தொழில் முன்னேற்றம் சுபகாரியப் பேச்சுக்கள், பாக்கிகள் வசூலாகுதல், வாகன யோகம், பூமி யோகம் போன்றவற்றை படிப்படியாக வழங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஈடுபாடு கொள்வீர்கள்.

கும்பத்தில் புதன் எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் இராசிநாதன் சனியும் வக்ரமடைகிறார். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வீடு மாற்றங்களும், ஊர் மாற்றங்களும் வந்து சேரலாம். மற்றவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ள முடியும். நோய்க்கான அறிகுறி தெரியும் பொழுதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

இம்மாதம் பிரதோஷ நேரத்தில் நந்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பெருமைகள் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் நீங்கள் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். சுபவிரயங்களைச் செய்வது நல்லது. இடம், பூமிகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுங்கள்.

சேமிப்பு கரைகிறதே என்று கவலைப்பட வேண்டாம். குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்துங்கள். அவர்கள் தானாகவே முடிவெடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். இம்மாதம் 26 இற்கு மேல் உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். அனுமன் வழிபாடு உங்கள் அல்லல்களை அகற்றும்.




(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

*எதையும் எப்படியும் முடிக்கலாம் என்ற சிந்தனையை வளர்த்துக் கொண்டிருக்கும் மீனராசி நேயர்களே!*

நீங்கள் பிறருக்கு உதவுவதில் ஆர்வம் கொண்டவர்கள். குடும்பத்தினர்களுக்காக தியாகங்களைச் செய்வீர்கள். கல்வியில் முதலிடம் பிடிப்பவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம் பிடிக்கும். எந்தச் சூழ்நிலையைக் கண்டும் கலங்க மாட்டீர்கள். கலை, இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பீர்கள். சொந்த முயற்சியிலேயே முன்னுக்கு வரவேண்டும் என்று விரும்புவீர்கள்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்மத்தில் குரு சஞ்சரிப்பதால், பயணங்கள் அதிகரிக்கும். பக்க பலமாக இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தைப் பெற முடியும். இடமாற்றம், ஊர் மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம். இலாப ஸ்தானத்தில் சூரிய, செவ்வாய் சேர்க்கை இருப்பதால், அரசு வழியில் தொல்லைகளும், உத்தியோகத்தில் திடீர் மாற்றங்களும் உருவாகும்.

சனியின் பார்வை இருப்பதால், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குறி பாக, குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும் என்பதால், பெரியோர்களிடம் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது. சப்தம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியால் நற்பலன்கள் பெற விரதங்களும், வழிபாடுகளும் தேவை. குறிப்பாக, கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை. வரவைக் காட்டிலும் செலவு கூடும் விதத்தில் வாழ்க்கைத் தேவைகள் அதிகரிக்கும்.

இம்மாதம் 26ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 4, 7இற்கு அதிபதியான புதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது வீடு, இடம் விற்பனையால் இலாபம் கிடைக்கும். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். தொழில் நிலையத்தில் இடமாற்றம் செய்வதன் மூலம் இனிய பலன்களைப் பெறலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற ஒத்துழைப்புச் செய்வீர்கள். சேமிப்பில் சிறிது கரையலாம். நீண்டதூர பயணங்களை மேற்கொள்பவர்கள் கொஞ்சம் யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

3, 8 இற்கு அதிபதியான சுக்ரன் 10இல் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. தொழிலில் கூட்டாளிகள் விலகலாம். தொல்லைதரும் எதிரிகளின் பலம் கூடாமல் இருக்க, அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்டதூர மாற்றங்கள் கூட வந்துசேரலாம். அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் உங்கள் இராசிநாதனுக்கு பகை என்பதால், தொழில் ஸ்தானத்தில் அது சஞ்சரிக்கும் பொழுது, கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.


எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, யோகத்தை வழங்கும். எனவே, தொழில் சீராக இருக்கும். வருமானம் திருப்தி தரும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு. சனியின் வக்ர இயக்கம் நன்மையும், தீமையும் வழங்கும். எனவே, இக் காலத்தில் உறவினர் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

இம்மாதம் சனியின் பார்வையில் உங்கள் இராசி இருப்பதால், விநாயகப் பெருமான் வழிபாடும், விஷ்ணு கோவிலில் வீற்றிருந்து அருள் வழங்கும் அனுமன் வழிபாடும் உங்களுக்கு உகந்ததாகும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. பொன்னான நேரத்தில் சிறிது நேரத்தை வழிபாட்டிற்கு உதவுங்கள். கணவன்-மனைவி உறவில் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே கனிவு கூடும். பக்கத்து வீட்டாரின் பகை கூடலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியம் சீராகும். செலவு நடைகள் கூடும். சனி வழிபாடு சஞ்சலம் தீர்க்கும். (முற்றும்)




தைப்பூசத்தை முன்னிட்டு ஜே/80 பெரிய கடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி வழங்கும் நிகழ்வு அண்மையில் அச்சங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சமாசத்தலைவர் மாணவி ஒருவருக்கு அப்பியாசக் கொப்பி வழங்குவதையும் அருகில் சங்கத் தலைவி நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சிறைகளில் ஜாமர் இயந்திரம்; கைத் தொலைபேசிகளுக்கு தடை

செல்லிடத் தொலைபேசி அலைவரிசைகளைத் தடைசெய்யும் ஜாமர் இயந்திரமொன்றை சிறைச்சாலைகளில் பொருத்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் முதற் கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலையில் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணிகள் கடந்த 20 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜாமர் இயந்திரம் பொருத்தப்பட்ட பின் சிறைச்சாலைக்குள் எந்தவொரு செல்லிடத் தொலைபேசியும் இயங்காத வண்ணம் தடை செய்யப்படும்.

சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகள் அங்கிருந்து கொண்டே செல்லிடத் தொலைபேசி ஊடாக வெளியுலகைத் தொடர்பு கொள்வது ,சிறையிலிருந்த படியே குற்றச் செயல்களைத் திட்டமிடுதல் மற்றும் வழி நடத்தல் என்பவற்றைத் தடுக்கும் நோக்குடனேயே ஜாமர் இயந்திரங்கள் பொருத்தப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.தற்போதைக்கு இலங்கையின் பிரதானச் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான கைதிகள் திருட்டுத்தனமாக கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி வருவது கண்டறியப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை முற்றாக இல்லாதொழிப்பதற்கு ஜாமர் இயந்திரம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் ஏனைய சிறைச்சாலைகளிலும் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிய வருகின்றது. (ஸ்ரீ-2)

## பழைய மாணவர்களுக்கான கூட்டம்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தலைவர் என். செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி வளர்ச்சி சார்ந்த முன்மொழிவுகள் இடம்பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் சமூகம் தர இயலாதவர்கள் தங்கள் பெயர், முகவரி ,தொலைபேசி இலக்கம் என்பவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் தெரியப்படுத்துமாறும் கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-9)

## சன்சி கப்பலில் சென்ற 15 பேர் நாடு கடத்தப்படும் அபாயம்

எம்.வி.சன்.சி.கப்பலில் கனடாவைச் சென்றடைந்த இலங்கைத் தமிழர்கள் சுமார் 400 பேர் வரையானோரில் 15 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளார்கள் என்று தெரிகின்றது.

இவர்களில் 14 பேர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் 15 ஆவது நபர் பயங்கரமான குற்றவாளி என்றும் இவர்களை உடனடியாக நாடு கடத்தியே ஆக வேண்டும் எனவும் கனேடிய பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

இவர்கள் குறித்த தகவல்கள் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் பேரவைக்கு புலனாய்வாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களின் அரசியல் தஞ்சக் கோரிக்கைகளை நிராகரித்து விட வேண்டும் என்றும் இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பி விட வேண்டும் எனவும் பேரவைக்கு சிபாரிசும் செய்துள்ளனர். (ஸ்ரீ-2)

# ஆசிரியரின் திருமணத்திற்காக பாடசாலைக்கு விடுமுறை

## விசாரணை நடத்த கோரிக்கை

(கொழும்பு)

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கினிகத்தேனை சிங்கள மகா வித்தியாலயத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர் ஒருவரின் திருமணத்தினை முன்னிட்டு பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் விடுமுறை வழங்கப் பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆசிரியரின் திருமணத்திற்காக இந்தப்பாடசாலையை நேற்று முன்தினம் மூடுவதற்கு ஹற்றன் கல்வி வலயத்தின் மேலதிக கல்விப்பணிப்பாளர் ஒருவர் அனுமதி வழங்கியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பாக ஹற்றன் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரெங்கராஜ் தெரிவிக்கையில்,

ஆசிரியர் ஒருவரின் திரு மணத்திற்காக பாடசாலைக்கு விடுமுறை வழங்க முடியாது. குறிப்பிட்ட பாட சாலைக்கு விடுமுறை வழங்கப்பட்ட நாளுக்குப் பதிலாக பிறிதொரு நாளில் பாடசாலையை நடத்துவதற்கு குறிப்பிட்ட பாடசாலையின் அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

# பழவகைகள், மரக்கறிகளை பொதி செய்யும்போது விசேட கவனம்

(கொழும்பு)

பழ வகைகள் மற்றும் மரக்கறி வகைகளை பொதி செய்யும் போது விசேட கவனம் செலுத்த வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவற்றை மரத்திலான அல்லது கடினமான காகிதாதி அல்லது பிளாஸ்டிக் கொள்கலன்கள் என்பனவற்றில் பொதி செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் 10ஆவது சரத்திற்கு அமைய இது சட்டமாக இயற்றப்படும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகதுறை அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை எடுக்க தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய முறையில் இவற்றை பொதி செய்ய தவறுவதன் காரணமாக பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் அதிகளவில் சேதமடைவதாகவும் இதனை தடுக்கும் நோக்கிலேயே இந்த சட்டத்தை அமுல்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)


மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்

முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

GOODLINE MANPOWER SERVICES

38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.

Tel : 011 3091521 Hotline : 077 3179592


# மலசலகூடம் அமைத்து தருமாறு கோரிக்கை

பூநகரி வாடியடியில் பிரதான பஸ் தரிப்பு நிலையம் அமைந்துள்ள நகர்ப்பகுதியில் 25க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இயங்கி வருகின்றன.

முக்கிய கேந்திர நிலையமான இப்பகுதியில் மலசலகூடம் எதுவுமே இல்லாத நிலையில் பயணிகளும் கடைக்கு வருவோரும் பெரும் சிரமம் அடைவதாக அப்பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுத்து இம் மக்களின் சிரமத்தைப் போக்கும் முகமாக தற்காலிகமாகவேனும் ஒரு மலசல கூடத்தை அமைத்துத் தருமாறு அப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஶ்ரீ-3-84)

# இலங்கை இளைஞனுக்கு டுபாயில் ஆறுமாத சிறை

(கொழும்பு)

பிரித்தானிய பெண் ஒருவரை பாலியல் குற்றம் செய்த குற்றச் சாட்டின் பேரில் இலங்கையரான 28 வயது இளைஞனுக்கு டுபாய் நீதிமன்றம் ஆறுமாத கால சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்து உள்ளது.

இவ் இளைஞன் ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி என்றும் குடித்து விட்டு இரவு நேரத்தில் பிரிட்டன் பெண் மீது சேட்டைகள் செய்ததில் அகப்பட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றது. இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நீதிமன்றம் இச்சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. அத்துடன் சிறைத்தண்டனைக் காலம் முடிவடைந்ததும் குறித்த நபர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டது. (ஶ்ரீ-2)

# 2011.01 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1368* - சூ யுவான்ஷாங் சீனாவின் பேரரசனாக முடிசூடினான். இவனது மிங் பரம்பரை 3 நூற்றாண்டுகள் சீனாவை ஆண்டது.

★ *1556* - சீனாவின் சாங்கி மாநில நிலநடுக்கத்தில் 8இலட்சத்து 30ஆயிரம் வரையானோர் இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப்பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.

★ *1570* - ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது.

★ *1639* - பெருவைச் சேர்ந்த யூதக் கவிஞர் பிரான்சிஸ்கோ மல்டொனால்டோ டி சில்வா எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ *1719* - புனித ரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ்டைன் நாடு உருவாக்கப்பட்டது.

★ *1789* - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக்கக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ *1793* - ரஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பிரித்தனர்.

★ *1833* - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

★ *1870* - மொன்டானாவில் அமெரிக்கப் படைகளினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 173 செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ *1874* - விக்டோரியா மகாராணியின் மகன் எடின்பரோ கோமகன் அல்பிரட் ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டரின் ஒரே மகளான மரீயா அலெக்சாந்திரொவ்னாவை திருமணம் புரிந்தார்.

★ *1924* - விளாடிமிர் லெனின் ஜனவரி 21 இல் இறந்ததாக சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

★ *1937* - லியோன் ட்ரொட்ஸ்கி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் அரசைக் கவிழ்க்க முயன்றதாக 17 கம்யூனிஸ்டுகளின் மீது மொஸ்கோவில் விசாரணைகள் ஆரம்பமாயின.

★ *1943* - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் தலைநகர் திரிப்பொலியை நாசிகளிடம் இருந்து பிரித்தானியர் கைப்பற்றினர்.

★ *1943* - இரண்டாம் உலகப் போர்; அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் பப்புவாவில் யப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர். இது பசுபிக் போரில் யப்பானியரின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

★ *1950* - இஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தது.

★ *1973* - வியட்நாமில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.

★ *1996* - ஜாவா நிரலாக்க மொழியின் முதற் பதிப்பு வெளியானது.

★ *1998* - யாழ்ப்பாணம், புங்குடுதீவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதில் அம்முகாமில் இருந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

★ *2002* - அமெரிக்க ஊடகவியலாளர் டானியல் பேர்ள் கராச்சியில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்.

★ *2005* - திருச்சி ஶ்ரீரங்கத்தில் கல்யாண மண்டபத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் மணமகன் உட்பட 62 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

★ *1876* - ஒட்டோ டியெல்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1954)

★ *1897* - சுபாஷ் சந்திரபோஸ், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் (இ.1945)

★ *1907* - ஹிடெக்கி யுக்காவா, நோபல் பரிசு பெற்ற யப்பானியர் (இ.1981)

★ *1915* - ஆர்தர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (இ. 1991)

★ *1918* - கேர்ரூட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ.1999)

★ *1929* - ஜோன் போல்யானி, நோபல் பரிசு பெற்ற கனேடியர்

★ *1930* - டெரெக் வால்கொட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

## இறப்புகள்

★ *1873* - இராமலிங்க அடிகள், ஆன்மீகவாதி (பி.1823)

★ *1944* - எட்வர்ட் மண்ச், நோர்வே நாட்டைச் சேர்ந்த ஓவியர் (பி.1863)

★ *1989* - சல்வடோர் டாலி, ஸ்பானிய ஓவியர் (பி.1904)

**1957 - சென்னை மாநிலத்தில், தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.**

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஆசை மகளே

ஊரும் உறவும்
ஏதேதோ கேள்வி கேட்டு
நம்மை கேலி செய்கிறது
நேற்றிருந்த வசந்தம்
இன்று வீட்டில் இல்லையம்மா
அதுவும் உன்னோடே
ஓடிப் போய்விட்டது
புது உறவு ஒன்றுக்காய்
நம்மை சாகடித்தாய்
பிள்ளைமனம் கல்லென்று
ஓடிப் போய் புரியவைத்தாய்
எதிர் காலம் கவனமம்மா
உன் சிறுசுகளும்
· உன்னை இது போல
நோகடிக்கலாம் – நாளை

செ.சுசி
குப்பிளான்



### சத்தியம் செய்

தீயே! எனக்கு
சிதை வைத்தபின்
என் உடலைத்தின்பதுபோல்
என் இதயத்தை மட்டும்
தின்று விடாதே
அங்கே தான்
என்காதல் நினைவுகள்
குடியிருக்கின்றன
அவைகளாவது
கடைசி வரை வாழட்டும்.

ம.சுமன்

### அழியா வரம் பெறுவாய்!

வாழ்க்கை வாழ்வதற்கே!
கல்வி கற்பதற்கே!
ஆலயம் தொழுவதற்கே!
எட்டு வயதினிலே எனை
உன் கவிதைக் கலசத்தில்
எழுதத் தூண்டும் வலம்புரியே!
வற்றாத பொய்கையாய் எம்
தாயகத்தில் வலம் வர
வாழ்த்துகின்றேன்!

அ.அன்பரசன்
யா/வரணி சைவப்பிரகாச
வித்தியாலயம்

### கவிதைத் துளிகள்

**முகவரி**
உனைத் தேடி எனை மறந்ததால்
தேடுகிறேன் என் முகவரியை

**காலம்**
கனவிலும் மீட்டிப்பார்க்கலாம்
ஆனால்
திரும்பி வர முடியாத உயிர்

**சீதனம்**
விளம்பரம் இல்லாத
வியாபாரம்

**கனவு**
நினைவுகளின்
மறு ஒளி பரப்பு

எஸ்.ஜிந்துயா
கோண்டாவில்

### பிரிவின் தன்மை

உறவுகள் பிரிந்தாலும்
நினைவுகள் பிரிவதில்லை
தூய்மையான அன்புக்கு
பிரிவுகள் நிரந்தரமில்லை

ச.மேரிராணி
ஈச்சமோட்டை

### வாழ்க்கை கடல்

கலங்கிப் போய்க் கிடக்கிறது
என் வாழ்க்கைக் கடல்
என் செய்வ தென்று
தெரியாமல் தவிக்கிறேன் நான்
என் இன்மதிப் பறவை
மரணத்தின் போது பூமியில்
இப்போது என் மனவெளிழியில்
பார்த்துக் கொண்டிருப்பதோ
கண்ணீர் பறவைகள்
நான் உறவுகளை பிரிந்தவனல்ல
பல உறவுகளை இழந்தவன்

உயிரோவியன்

### என்ன திமிர்

அவள் கூந்தல்
ரோஜா மேல்
எழுகிறது! வெறுப்பு
என்ன திமிர் அதற்கு
என் ரோஜாவின் மேலேயே
ஜோராய் உட்கார

பா.பொன்னிலவன்
மீசாலை

### இமயம் தொட...

எல்லோரும் வெறுக்கும்
மயிர் கொட்டிகள் தான்
மனங்களைக் கவரும்
வண்ணத்துப் பூச்சிகளாகின்றன
உன்னை யார் வெறிக்கின்றார்களோ
அவர்களுக்கு
புன்னகையினை பரிசளி
எறும்பு ஊர ஊர
கல்லும் குழியும்

மாவை. நா.கஜேந்திரா

### காத்திருப்பு

உனக்காக காத்திருப்பது
நான் மட்டுமல்ல
உனது நினைவுகளைச்
சுமக்கும்
எனது இதயமும் தான்!
காத்திருக்கும் காதல் சுகமானது
காலமெல்லாம் காக்கவைக்கும்
காதல் ரணமானது
காத்திருப்போம் காதலிப்போம்
காதல் உலகம் கண்டு
மகிழ்வோம்



செ.ரவிசாந்
குப்பிளான்.



# மௌனத்தின் தேடல் – 54

### மனத் திடம்

தள்ளாடும் வயதிலும்
தளராத நம்பிக்கையோடு
உழைக்கும் உயர்ந்த
உள்ளங்களின் மனத்திடம்
தூங்கிக் கிடக்கும்
இளையவர்களை
தூக்கி நிறுத்தட்டும்

சு.சி.தமிழினி
சுன்னாகம்

### முகவரி தேடி...

முதியவர் சுமையினை
முதுகினிற் தாங்கிடாப்
புதியவர் சமுகத்தில்
முகவரி தேடிடும்
முதியவர் பயணம்

வீ.வினிஸ்
சாந்தை

### தேடல்

முட்கம்பி வேலிக்குள்
காணாமல் போன
எமது உறவுகளே!
உங்களைக்
காணத்துடிக்கும்
எம் தேடலின் முடிவு
கானல் நீராக...

கெ.ரி.லோஜினி
சிறுப்பிட்டி

### மன்னித்திடாயோ?

இயற்கையே ஏன்
இந்தச் சீற்றம்
தள்ளாத இவ் வயோதிபருக்கு
தண்டனை ஏன்?
தயவாக நீயும் தான்
மன்னித்திடாயோ?

தங்கத்தமிழன்
காரைநகர்

### இளமை

வயதினிலே முதுமை
செயலினிலே இளமை
தள்ளாடும் வயதினிலும்
தளராத துணிவுடன்
தன்மானத் தமிழராக...

கி.சரண்ராஜ்
கிளிநொச்சி

### கூண்டு

தள்ளாத வயதிலும்
குடும்ப சுமை இறக்க
குப்பை மேட்டில் நீங்கள்
உங்கள் பிள்ளைகளோ
குன்றாத இளமையிலும்
குடும்ப சுமை இறக்க
வழியின்றி சிறைக் கூண்டில்

பூநகரான்

### ஏழ்மை

ஏழைகள் வாழ்வில்
மழையோ வெயிலோ
எதுவுமே தெரிவதில்லை
வயிறார உணவுண்ண
அவர் படும் பாடு
யாருக்கும் புரிவதில்லை

ப.அமிர்தினி
பூநகரி

### கவலை மறந்து

கவலை யாவற்றையும்
தம்முள் மறைத்து
தம் பிள்ளைகளுக்காக
குப்பைகளாய் மாறிய
இவர்களை நாளை
இவர் பிள்ளைகள்
மறப்பது நிச்சயம்

இ.தர்சன்
அண்ணாசிலையடி

### நிலைமை

குப்பத்தில் இருந்த காலம் போய்
குப்பைக்குள் இருக்கும்
காலம் வந்துவிட்டது

கு.குலமகள்
யாழ்ப்பாணம்

### உழைப்பாளிகள்

ஊனைச்சுருக்கி
உடலை வருத்தி
உழைக்கின்ற
உள்ளங்கள்
உறவுகள் வளமாய்
வாழ்ந்திட நம்மை
உருக்குகிறார்கள்

சி.வினோவர்மன்
புளியங்கூடல்

காலத்தின் கைகளிலே
சிக்கித் தவிக்கும்
எம் வாழ்க்கைக்கு
எல்லையிட
ஏற்றிச் செல்கின்றீர்களா?
வாழைச் சருகுகளை

சு.பிரியங்கா
வயாவிளான்.ம.ம.வி

### எம்மவர் சோதனை

உள்ளத்தை உறையவைத்து
உருவழித்த உணர்வுகள் –
மறையு முன்பே
வெள்ளத்தால் வந்ததுவே
மீண்டும் வேதனை
தொடருமா
எம்மவர் சோதனை?

பொ.புனிதன்
வரியப்புலம்

### மிச்சம்

நாங்கள் பயணம் செய்ய
குப்பை வண்டிலாவது
மிஞ்சியிருப்பதை நினைத்து
சந்தோசமடைவோம்

ந.சுவேனியா
யாழ்ப்பாணம்

### வைரக் கரங்கள்

வயோதிபத்திலும் வயிற்றுப்பசிதீர
வண்டியிலே வேலை செய்யும்–
வைரக்கரங்களின்
வழிப்பயணம் தொடர்கிறது

எஸ்.கே.நிலா
வடமராட்சி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 55



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை


ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.01.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# “என்னை மிகவும் கவர்ந்த சிங்கப்பூர் சமூகத்தின் வாழ்வியல்”




தென்கிழக்காசியாவில் சிங்கப்பூர் சிறிய தீவாக இருந்தபோதும் இன்று பொருளாதாரத் துறையில் வளமிக்க நாடாகத் திகழ்கிறது. 1819இல் சிங்கப்பூருக்கு வந்த கிழக்கத்தியக் கம்பனியைச் சார்ந்தவர்கள் மீன்பிடித் தீவாக இருந்த சிங்கப்பூரைக் கப்பற் துறைமுகமாக மாற்றி வியாபாரத் தளமாகவும் மாற்றியமைத்தனர். இந்த அழகிய தீவு என்னை மிகவும் கவர்ந்தது. அங்கு நான் கண்டவை இன்று நமது நாட்டிற்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்தவருக்குத் தேவையானது எனக்கருதி இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

சிங்கப்பூரின் திட்டமிட்ட செயற்பாடுகள்தான் இன்று இத்தீவை உலகின் பொருளாதாரக் கேந்திர மையமாக மாற்றியுள்ளது. இந்தச் செயற்பாட்டில் இலங்கை, இந்தியத் தமிழர்கள் முக்கியமான பங்கினை வகித்திருக்கிறார்கள், வகித்தும் வருகிறார்கள். சிங்கப்ரின் தலைமகனாகக் கொண்டாடப்படுபவர்களில் அமரர் இராஜரட்ணம் முக்கியமானவர். இவரே சிங்கப்பூரின் மூளையாகச் செயற்பட்டு நாட்டை அபிவிருத்தி செய்வதில் முன்னாள் பிரதமர், இந்நாளில் பிரதம நிபுணத்துவ ஆலோசக அமைச்சராகவிருக்கும் லீ-குவான்யூ (வயது 82) அவர்களுக்கு வழிகாட்டியாகவிருந்த சிங்கப்பூர் சிற்பியாவார்.

இன்றைய சிங்கப்பூர் அரசின் முக்கிய அமைச்சுகளுக்கு அமைச்சர்களாகத் தமிழரே காணப்படுகின்றனர். தற்போது ஜனாதிபதியாகவுள்ள திரு.எஸ்.ஆர். நாதன், பாராளுமன்றத்தின் சபாநாயகர் திருமதி இந்திராணி துரைராஜா (இவர் சிங்கப்பூரின் பிரபலமான சட்டத்தரணியாவார்), நிதியமைச்சர் திரு.தர்மன் சண்முகரெட்ணம், பாதுகாப்புச் சட்ட அமைச்சர் திரு.க.சண்முகம், உள்ளூராட்சி அமைச்சர் திரு.வி. ஆறுமுகம் ஆகியவர்கள் மேற்படி குறிப்பிடப்படக் கூடியவர்கள்.


சிங்கப்பூரில் உள்ள சிவில் எஞ்ஜினியர்களில் (Civil Engineers) பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்து இளைஞர்களாவார்கள். அங்குள்ள விண்ணுயர்ந்த கட்டங்கள், சீரிய நேரிய பாதைகள், நிலத்தடிப் புகையிரதப் பாதை, செந்தோசா (Sentosa) சுற்றுலா மையம், சிங்கப்பூர் விஞ்ஞானநிலையம் (Science Centre) போன்றவை நம் இளைஞர் களின் கைவண்ணத்தில் பிரமிப்பூட்டுவது கண்டு வியப்புற்றேன். இந்த இளைஞர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்தாது அவர்களை விட்டுவிட்டோம் என்பது வேதனை தருவதாக இருந்தது.



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கட்டடக் கலை வல்லுநர்களின் திட்டத்தில் புதிய உல்லாசப் பயணிகள் கட்டடம், சிங்கப்பூர் தலைநகர் சங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது. அருகருகே இரண்டு மாடி வீட்டுத் தொகுதிகள் (ஒவ்வொன்றும் 30 அடுக்குக் கொண்டது) இரண்டையும் மேல் மட்டத்தில் இணைத்து அழகிய நீச்சல் தடாகம் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுக் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகிறது. நீச்சல் தடாகத்தின் கரையில் மண் நிரப்பி மரங்களும் வைக்கப்பட்டிருப்பதை என்னவென்று சொல்லுவேன்! தமிழன் கட்டடக் கலையில் நிபுணன்தான்!

சிங்கப்பூரில் இரண்டு முக்கிய வர்த்தக மையங்கள் காணப்படுகின்றன. லிட்டில் இந்தியா டவுன், சைனா டவுன் என இவை அழைக்கப்படுகின்றன. உல்லாசப் பயணிகளின் சந்தை இவையாகும். இப்பகுதிகளில் சீனர், இந்தியர், மலேசியர் ஒற்றுமையாக வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். சீனர்களும் இந்தியர்களும் முழுச் சிங்கப்பூரையும் ஆட்சிப்படுத்து கின்றனர் (இலங்கையில் ஏற்பட்டு வரும் நிலை யை இதனுடன் ஒப்பிடாதீர்கள்).

“Sentosa” தீவுக்குள் ஒரு அழகிய தீவு. கடற்கரையிலிருந்து இந்தத் தீவுக்குள் நுழைவதற்கு ஆகாய மார்க்கமாக இழுகருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஏறிச் செல்லும் போது முழுச் சிங்கப்பூரின் அழகையும் காண முடியும். இத்தீவில் பெரிய ஆடம்பரத் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அண்டகிறவுண்ட் வேர்ல்ட் (Underground World) எனும் பெயரிலுள்ள கடல்வாழ் விலங்குகளின் காட்சியறை வியப்பூட்டும். 4D படக் காட்சியறை பிரமிக்க வைக்கிறது. பழைய பொருட்களைக் கண்காட்சிப்படுத்தியுள்ள முறையே முறை!




சிங்கப்பூரின் சொர்க்கம், உல்லாசப் பயணிகளின் சுதந்திர பூமி இதுவாகும்.

சிங்கப்பூரின் சிறப்புக்கு அங்குள்ள சட்டங்கள் உறுதுணையாகவுள்ளன. சிங்கப்பூர் தெருக்கள் சுத்தமாகவுள்ளன. குப்பைகளை வீசுதல், எச்சில் துப்புதல், சிகரெட் பிடித்தல் போன்றவை தண்டனைக்குரிய குற்றங்களாகும். புகைப்பிடிப்பதற்குக் குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடங்களில் மட்டுமே புகைப்பிடிக்க முடியும். பாதைகளில் நேர்த்தியாக வைக்கப்பட்டுள்ள குப்பை கொட்டும் பிளாஸ்ரிக் கூடைகளின் அணிவகுப்புத் தனி அழகைத் தருகிறது. பாதைகளின் இருமருங்கிலும் மரங்கள் வைக்கப்பட்டுப் பசுமையாகக் காட்சி தருகின்றன.

சிங்கப்பூரிலுள்ள சில கடும் சட்டங்கள் பற்றிக் குறிப்பிட வேண்டும். ‘CASENO’ எனும் சூதாட்ட மையம் தலைநகரில் புதிதாக அமைந்துள்ளது. இச்சூதாட்ட மையம் உல்லாசப் பயணி களின் பணத்தைச் செலவிட வைக்கும் இடமாகும். சிங்கப்பூர் பிரஜைகள் இச்சூதாட்ட மையத்திற்கு நுழைவதற்கு 500 வெள்ளி அனுமதிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். உல்லாசப் பயணிகளுக்கு அனுமதி இலவசம் (ஒரு வெள்ளி இலங்கைப் பணத்தில் ஏறத்தாழ 90 ரூபாவாகும்). இதற்குக் காரணம் சிங்கப்பூர் மக்கள் சூதாட்ட மையத்தினுள் நுழைவதைத் தடுப்பதாகும். இவ்வாறு சிவப்பு விளக்குப் பகுதிகளுக்கும் உள்ளூர் வாசிகள் நுழைவது கடுமையாக்கப் பட்டுள்ளது. இதில் ஆச்சரியப்பட வைப்பது யாதெனில் சூதாட்ட மையம், சிவப்பு விளக்குப் பகுதிக்கு உள்ளூரில் உள்ளவர்கள் அனுமதிக் கட்டணம் செலுத்திச் செல்வதை இரத்த உறவினர் (குடும்பத்தினர்) விரும்பாத பட்சத்தில் பொலிஸாருக்கு அறிவித்தால், சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவதுடன் மீண்டும் இத்தவறு செய்தால் ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது.




பாடசாலை மாணவர்களின் ஒழுக்கச் செயற்பாடுகள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூரிலுள்ள பிரபலமான கல்லூரி சென்.பற்றிக்ஸ் கல்லூரியாகும். இக்கல்லூரியின் அதிபராக வட்டுக்கோட்டையைச் சார்ந்த சிவசுப்பிரமணியம் என்பவர் கடமையாற்றுகிறார். (அதிபரின் மூதாதையர்கள் வட்டுக்கோட்டையைச் சார்ந்தவர்கள். ஆனால் இவருக்கு வட்டுக்கோட்டை தெரியாது). அங்கு மாணவர்களை அதிபரே தண்டிக்கிறார். “பிரம்படி” கொடுக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்புகளும் இங்கு ள்ள அதன் ஆர்வலர்களும் இதனை அறிந்து கொள்வது நல்லது.

ஒழுக்கச் செயற்பாடுகளில் கட்டுப்பாடு அவசியம். இதற்குக் கடுமையான தண்டனை வழங்கப் படவே வேண்டும். இஸ்லாமிய நாடுகளில் தெருவில் வைத்து கல்லால் அடித்தல், பிரம்படி, கை-கால் வெட்டுதல், மரண தண்டனை என்பன வழங்கப்படுவதை யாவரும் அறிந்திருக்கிறோம்.

தானாகச் சரியாக நடப்பது என்பது சிலரால் தான் முடியும். சட்டத்தின் மூலம் வழங்கப்படும் தண்டனையே நாட்டை, மக்களை ஒழுங்குபடுத்தும். இதற்கு நல்ல உதாரணமாக அமைவது சிங்கப்பூர் சட்டங்களாகும். அங்கு 19 வயதுக்குட்பட்ட மாணவர்கள் இழைக்கும் எல்லா வகைக் குற்றங்களுக்கும் கசையடி வழங்கப்படுவதுடன், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்படுகின்றது. அடியேன் சிங்கப்பூரில் இருந்தபோது, 19 வயது இளைஞன் ஒருவன் 17 வயதுப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தான் என்ற குற்றத்திற்காக மரணதண்டனை வழங்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டதை அறிந்தேன். (ஆதாரம்: சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் தமிழ் முரசு நாளிதழ்).

“திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டேயிருக்குது, அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது, திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது” என்பது பட்டுக்கோட்டையின் வரிகள். ஆயினும் சிங்கப்பூர் சட்டம் சிங்கப்பூரை மேம்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும்.

சிங்கப்பூர் பாடசாலைகளில் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. சீனம், தமிழ், மலே, ஆங்கிலம் அரச மொழிகளாகும். தாய்மொழியில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி நூல்களில் இலக்கணம் முக்கிய இடம்பெற் றுள்ளது. சிங்கப்பூர் வீதிகளின் பெயர்கள், வர்த்தக நிலையங்க ளின் பெயர்கள், அரச நிர்வாக அலுவலகங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் பிழையின்றி எழுதப்பட்டுள்ள தமிழ் வாசகங்கள் நெஞ்சைக் குளிர வைத்தன.

சிங்கப்பூரின் அடுத்த சிறப்பம்சம் போக்குவரத்து வசதிகள். பஸ், புகையிரதம், டக்சி (Taxi) அனைத்தும் ஒழுங்கான முறையில் இயங்குகின்றன. கட்டணங்களை மக்கள் தாமாகவே முன்வந்து எந்திரப்பொறி மூலம் செலுத்துகின்றனர். பஸ்ஸில் நடத்துநர் இல்லை; சாரதி மட்டுமே உள்ளார். டக்சிகளுக்கு இணைப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தை அழுத்தியதும் சில நிமிடங்களில் நாம் நிற்கும் இடத்திற்கு டக்சி விரைந்து வருகிறது.

சிங்கப்பூர் ‘சிலோன் றோட்’ எனும் இடத்தில் அடியேன் தங்கியிருந்தேன். இந்தப் பகுதியில் கண்ட இரண்டு காட்சிகள் என்னை வியப்பில் ஆழ்த்தின. இந்த சிலோன் வீதியில்தான் இலங்கையர்கள் முதலில் குடியேறியிருக்கிறார்கள். சிங்கப்பூர் ஜனாதிபதி திரு எஸ்.ஆர். நாதனின் வீடும் இந்தத் தெருவில் உள்ளது. இவர் அரச மாளிகையில் தங்குவதில்லை. தனது வீட்டில் வசிக்கிறார். வீட்டு வாசலில் ஒரேயொரு குர்க்கா காவலாளியாக இருக்கிறார். எந்தவிதமான ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் இல்லை. காலையில் அலுவலகத்திற்குச் செல்லும்போது ஆலவட்டங்கள் இன்றிச் செல்வது கண்டேன். நான் குறிப்பிடும் இப்பகுதி சிங்கப்பூரின் JOOGHAT, காதோம் வட்டாரமாகும். இதன் பாராளுமன்ற உறுப்பினராக “சான்-சூ-சென்“ எனும் சீன நாட்டவர் இருக்கிறார். இவரும் இத்தெருவிலேயே வாழ்கிறார். அரைக்காற்சட்டையுடனும் ரீ-சேட்டுடனும் (T-Shirt) காணப்படும் இவர் “ரேஸிங் சைக்கிள்” (Racing Cycle) ஒன்றில் தொகுதித் தெருக்களில் திரிகிறார். பழகுவதற்கு இனிமையானவர். நமது நாட்டு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்கப்பூர் செல்கிறார்கள். இந்தக் காட்சிகளை மட்டும் காண்பதே இல்லை போலும்!


‘சொல்லின் செல்வர்’
இரா.செல்வவழிவேல்

சிங்கப்பூரில் 27 இந்து ஆலயங்கள் உண்டு. இவை யாவும் அரசாங்கச் சட்டதிட்டங்களுக்குட்பட்டுச் சிறப்பாகச் செயற்படுகின்றன. நிர்வாகச் சிக்கல் ஏற்படும் வேளையில், சகல மத ஆலயங்களும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. இவ்வாறு ஐந்து ஆலயங்கள் அரசாங்க நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கின்றன. அரசாங்கச் செலவில் வெள்ளியினாலான தேர் அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஆலயங்கள் தேர்த்திருவிழாவின் போது இந்த இரதங்களைப் பயன்படுத்துகின்றன. எல்லா ஆலயங்களினதும் தேர் இவ்வெள்ளி இரதமேயாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயங்களில் கிரியைகள் மட்டுமன்றி மூன்று நேரமும் உணவு வழங்கப்படுகிறது. ஆலய நிர்வாகத்தின் கீழ் தமிழ், சைவ வளர்ச்சிக்கும் இசைத்துறை வளர்ச்சிக்கும் என இலவச பாடசாலைகள் இயங்குகின்றன. சைவ சித்தாந்த வகுப்புக்களில் அதிகளவு மாணவர்கள் படிக்கிறார்கள்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலால் – ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**

ஒழுக்கமே அனைத்துச் சிறப்பையும் தரும் என்பது வள்ளுவம். சட்ட ஒழுக்கத்தினால் சிறப்புடன் திகழ்வது சிங்கப்பூராகும். வாழை இலையில் உணவு பரிமாறுவதற்கும் உட்கொள்வதற்கும் ஒழுங்கைக் (ஒழுக்கத்தை) கடைப்பிடிப்பது தமிழர் பண்பாடாகும் என்பதை இறுதியாகக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.



நீண்டகாலத்திற்கு பின்னர்
விஜய் நல்ல படத்தில் நடித்திருக்காருப்பா...
அட யாருமே நம்பமாட்டேங்கிறாங்களே!

# காவலன்

திரை விமர்சனம்



ஒரு அழகான காதல் கதை ஆனால் அதில் கொமர்ஷியல் மிக்ஸிங். ஓவர் பில்டப் , எட்டுக் கட்டையில் தொண்டைக்கிழிய பஞ்ச் வசனங்கள். இது எதுவுமே இல்லாத விஜய் படம். ஓவர் அலப்பரைகளுக்கு மத்தியில் இந்த மாதிரி ஒரு காமெடி கலந்த காதல் படத்தை தேர்வு செய்த விஜய்யை பாராட்டலாம் .(வேற வழி செய்துதானே ஆகணும்) நாம செய்யுறது தப்பா கரெக்டா என தெரியாமல் படத்தில் நடித்திருக்கிறார் விஜய் என்றே சொல்லலாம். அது சில காட்சிகளில் அவரது முகத்தில் நன்றாகவே தெரிகிறது.


சண்டை சச்சரவுகளோடு திரிந்து கொண்டிருக்கும் விஜய் (பூமிநாதன்), விஜய்யின் மாமா மூலம் ராஜ்கிரணுக்கு பாதுகாவலனாக வேலைக்கு சேருகிறார். வில்லன் மகாதேவனால் தனது மகள் அசினுக்கு (மீரா) ஆபத்து வருமென அறிந்த ராஜ்கிரண் மீராவுக்கு பாதுகாப்பாக இருக்கும் படி விஜய்க்கு புரமோஷன் கொடுத்து விடுகிறார். அசின் படிக்கும் கல்லூரியிலேயே பாதுகாவலாக வேலை பார்த்து கொண்டு படிக்கிறார் விஜய்.

விஜய் தொல்லை தாங்க முடியாத அசின் அவருக்கு போன் போட்டு யாரோ ஒரு பொண்ணு மாதிரிப் பேச அந்தப் பெண்ணுடன் காதல் வளர்க்கிறார் காவலன் விஜய். விளையாட்டாய் தொடங்கின விடயம் சீரியஸ் ஆகிவிடுகிறது. தன் பெண்ணை காதலிப்பதை அறிந்த ராஜ்கிரண் விஜய்யை அடிக்கிறார். .. கடைசியில் காதலர்கள் ஒன்று சேர்ந்தார்களா இல்லையா என்பதே முடிவு.

காட்சிகளுக்கு சம்பந்தம் இல்லாமல் வந்தாலும் வரும் போதெல்லாம் கிடைத்த கேப்பில் பொங்கல் வைக்கிறார் வடிவேலு. அசினுக்கு பழைய நளினம் இல்லை. இருந்தாலும் நடிப்பைப் பொறுத்த வரை ஓகே. ராஜ்கிரண் கோட்டு சூட்டில் பார்க்கப் புதுசா இருக்கிறார். பேசும் போது அதே கிராமத்து வாசம்... நம்ப ஆளாச்சே!


கிட்டத் தட்ட வசீகரா ஸ்டைலில் ஒரு நல்ல படம். படம் ஆரம்பமாகி ரொம்ப நேரம் கழித்து வருகிறது. விஜய்யின் பஞ்ச் பாடல் விண்ணைக் காப்பான் ஒருவன். தேவை இல்லாத நேரத்தில் காதைக் கிழித்தாலும் அலப்பரைகள் அதோடு நின்று விட்டதில் மகிழ்ச்சி. வித்யாசாகரின் பி.ஜி.எம். சுமார். யாரது... யாரது... சூப்பர் மெலோடி. இருந்தாலும் விஜய் எண்ணெய் தடவிய முகத்தோடு வந்து தூங்க வைக்கிறார். முதல் பாதியை விட இரண்டாவது பாதியில் விஜய் சுறுசுறுப்பு... விஜய்க்கு கூட நல்லா நடிக்க வருமா என ஆச்சர்யம் வந்து விட்டது. பிரண்ட்ஸ் படம் மாதிரியே இந்தப் படத்தையும் நல்லபடமா கொடுத்திருக்கிறார் இயக்குநர் சித்திக்.

# ஜீவாவின் குவாட்டர் கலாட்டா



அயன் படத்திற்குப் பின்னர் இயக்குநர் கே.வி. ஆனந்த் இயக்கும் 'கோ' படத்தில் நடிக்கிறார் ஜீவா. ஹரிஸ் ஜெயராஜ் இசையில் பாடல்கள் வெளியாகி இருக்கிறது. உதயநிதி ஸ்டாலின் வெளியிட விரைவில் திரைக்கு வர இருக்கிறது. 'கோ' இதில் ஒரு புகைப்பட பத்திரிகையாளராக நடித்திருக்கிறார் ஜீவா. இதைப் பற்றி ஜீவா பேசுகையில் , 'பார்ன் வித் சில்வர் ஸ்பூன் ' என்று சொல்வார்களே அது போல் தான் நானும். ஆனால் சில நேரங்களில் இங்கிலீஷ் பேசும் போது எனக்கே தயக்கமாக தான் இருக்கும். ஏன்னா நான் நடித்த படங்கள் அந்த மாதிரி. லோக்கல் பாஷையில் 'மச்சி ஒரு குவாட்டர் சொல்லு' என்று பேசுவது தான் எனக்கு வசதி.

ஆனா இந்தப் படத்தில் பயங்கரமா இங்கிலிஷ் பேசி நடித்திருக்கிறேன் 'இதெல்லாம் கொஞ்சம் ஓவரா தெரியாதா சேர்' என்று இயக்குநரையும் கேட்டேன். அவரே ஒரு பெரிய கேமராமேன் என்பதால் பல விடயங்களை எனக்கு சொல்லிக் கொடுத்தார். ஒரு ஹீரோ துப்பாக்கி வைத்து சண்டை போடலாம். கமராவை துப்பாக்கி மாதிரி இந்தப் படத்தில் பயன் படுத்தி இருக்கிறார் இயக்குநர். இது ஒரு டபுள் ஹீரோ படம் இல்லை. எல்லா கரக்டருக்குமே ஒரு காரணம் இருக்கும் என்றார்.




படத்தில் அஜ்மல் கார்த்திகா (நடிகை ராதாவின் மகள்) பிரகாஷ்ராஜ் என பலரும் நடித்திருக்கிறார்கள். படத்தில் கதையை எழுத்தாளர் சுபா எழுத தனது பத்திரிகை அனுபவங்களையும் கிடைத்த செய்திகளையும் வைத்து படத்தை எடுத்திருக்கிறாராம் இயக்குநர் கே.வி. ஆனந்த்.



# சிறுத்தை

திரை விமர்சனம்

கார்த்திக்கு மற்றுமொரு கொமர்ஷியல் ஹிட்டாக வெளிவந்திருக்கும் படம் சிறுத்தை. தனது 5ஆவது படத்திலேயே தைரியமாக இரட்டை வேடத்தில் நடித்து கலக்கியிருக்கிறார் கார்த்தி. ரவிதேஜா - அனுஷ்கா நடித்த "விக்ரமார்குடு" தெலுங்கு படத்தை தமிழுக்கு ஏற்ற மாதிரி தர முயற்சித்திருக்கிறார் இயக்குநர் சிவா. சில இடங்களில் சலிப்பூட்டும் வகையில் அமைந்த தெலுங்குப் பட சாயல் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

சிங்கம் சூர்யாவைப் போல், டிஎஸ்பி ரத்னவேல் பாண்டியன் கெட்டப்பில் கம்பீரமாக தோன்றி மிரட்டுவதிலும், டி.எஸ்.பி ரத்தினவேல் பாண்டியன் கெட்டப்பில் கம்பீரமாகத் தோன்றி மிரட்டுவதிலும், திருட்டுத்தனம் செய்யும் ரொக்கெட் ராஜாவாக வந்து கலகலப்பூட்டி அனைவரின் வயிறையும் புண்ணாக்குவதிலும் கார்த்தி டபுள் ஓ.கே. காட்டுப் பூச்சியாக வரும் சந்தானம் படத்திற்கு பெரியபலம்.

ஆந்திராவின் தேவி பட்டினத்தில் மக்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் மூன்று ரவுடி சகோதரர்கள். அவர்களிடமிருந்து மக்களைப் காப்பாற்றும் ஆபத்பாண்டவனாக வருகிறார் ரத்தினவேல் பாண்டியன் (டிஎஸ்பி கார்த்தி) . ரவுடிக் குடும்பத்தை ஒடுக்கி மக்களுக்கு தைரியமூட்டுகிறார் ரத்தினவேல் பாண்டியன்.

ஆனால் ஒரு கட்டத்தில் வில்லன்களின் தாக்குதலில் படுகாயம் அடைகிறார்... கத்திக்குத்து பட்டு உயிருக்கு பேராடும் டிஎஸ்பி கார்த்தியை சிகிச்சைக்காக சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள் அவரது நம்பிக்கைக்குரிய பொலிஸ்காரர்கள்.

சென்னையில் ரொக்கெட்ராஜா கார்த்தியும், காட்டுப்பூச்சி சந்தானமும் திருட்டுத் தொழிலில் கில்லாடிகளாக வலம்வருகிறார்கள். சேட்டுவீட்டில் திருடச் செல்லும்போது, அங்கு தமன்னாவை பார்க்கும் கார்த்திக்கு அவரின் மீது காதல்வர... அனைத்தையும் திருடிக்கொண்டு ஓடும் சந்தானத்தை பிடித்துக்கொண்டு தமன்னாவிடம் நல்ல பெயர் வாங்குகிறார் கார்த்தி.

ரொக்கெட் ராஜாவான திருடன் கார்த்தி எதைச்சொன்னாலும் அப்படியே நம்பும் மக்குப்பெண்ணாக வருகிறார் தமன்னா. ரொக்கெட்ராஜா கடைசியாக ஒரு பெரிய பொருளாகத் திருடி விட்டு இனி திருடக்கூடாது என்று முடிவுக்கு வந்து ஒரு பெட்டியை திருடுகிறார். அதில் ஒரு குழந்தை இருக்கிறது, அந்தக் குழந்தை கார்த்தியை அப்பா என்று சொல்ல... தமன்னா - கார்த்தி காதலில் சிக்கல் ஏற்படுகிறது. அதேநேரம் ஆந்திர வில்லன்களின் ரவுடிக்கும்பல் ரொக்கெட் ராஜாவையும், அந்தப் பெண் குழந்தையையும் கொல்ல சென்னை வருகிறது. அது யார் குழந்தை என்று கண்டு பிடிக்கிறார் ரொக்கெட் ராஜா கார்த்தி. இரண்டு கார்த்தியும் சந்திக்கிறார்கள்.

அவரைப் போலவே இருக்கும் காவல் அதிகாரி ரத்தினவேல் பாண்டியன் பற்றி தெரியவர படம் சூடு பிடிக்கிறது. ரத்தினவேல் பாண்டியனாக தேவிபட்டினம் சென்று ரவுடிகளிடம் தமாசு செய்தே அவர்களைப் பந்தாடுகிறார் ரொக்கெட்ராஜா கார்த்தி.





படத்தின் முடிவு கொமர்ஷியல் சினிமாவின் யதார்த்தமான முடிவுதான். என்றாலும் படம் தொடங்கியதிலிருந்து முடிவு வரை கலகலப்பாகவும் விறுவிறுப்பாகவும் செல்வது படத்தின் பிளஸ்.

'உனக்கு பயப்பட்டு பழக்கம் இல்ல போல' என கேட்கும் மூத்த அலுவலரிடம் ," ஏழு வருடத்திற்கு முன்னாடி இந்த காக்கிச் சட்டையைச் போடும் போது, கடமைக்காக தான் என் உயிரை தருவேன் என சத்தியம் செய்தேன். ஏதோ ஒரு நாள் என் சாவு வந்தே தீரும். அந்த நாள், சாவை நேருக்கு நேரா பார்க்கும் அந்த நிமிடம் நாட்டுக்காக செய்து கொடுத்த சத்தியத்தை காப்பாற்ற முடியாமல் போயிடுமோ என்ற பயம்தான் எனக்கு இருக்கிறது" என்று சொல்லும் போது, கண்களில் கம்பீரம் காட்டி அசத்துகிறார் கார்த்தி.

அதேபோல், ரொக்கெட் ராஜா கார்த்தியும் சந்தானத்துடன் சேர்ந்து அடிக்கிற லூட்டியில் திரையரங்கே சிரிப் பொலியிலும், கைதட்டலிலும் அதிர்கிறது. நண்பன் விடயத்தில் கணக்குப் பார்கமாட்டேன். கணக்கு விடயத்தில் நண்பனையே பார்க்கமாட்டேன்" என்று கார்த்தி கூறி சந்தானத்தை சதாய்ப்பது செம ரகளை.

நகைகள் இருக்கும் பீரோவின் சாவி கார்த்தியின் கைக்கு கிடைக்கும் போது, 'கண்ணா லட்டு தின்ன ஆசையா' என்று கேட்கும் விளம்பர வரி கச்சிதமாகப் பொருந்தி கைதட்டல் பெறுகிறது.

கார்த்தி எது சொன்னாலும் நம்பும் தமன்னாவை பார்த்து, மொக்கை ஃபிகர பார்த்திருக்கேன், இது மக்கு ஃபிகரலை இருக்கு என்று கலாய்க்கும் இடத்திலும், டேய்! வாழ்க்கையில் நான் எத்தனையோ இடத்துல திருடியிருக்கேன். மெடிக்கல் ஷொப்புல திருட வச்சிட்டியேடா என்று வேதனைப்படும் இடத்திலும் ரசிகர்களுக்கு சந்தானம் சர்க்கரைப் பொங்கல்தான்.

ஆளாளுக்கு டேய்! டேய்ன்னு கத்துறீங்களே. அது என்ன ரவுடிங்களோட ரிங் டோனா? என்று சொல்லுவது என சந்தானம் வரும் காட்சிகள் எல்லாமே அதிரவைக்கும் காமெடிகள் தான்.

படத்தில் பாராட்டப்பட வேண்டிய இன்னொருவர் கலை இயக்குநர் ராஜீவன். கார்த்தி தங்கியிருக்கும் பாழடைந்த திரையரங்கு, ஆந்திர ரயில்நிலையம் என ராஜீவன் கைவண்ணம் அருமையாக இருக்கிறது.

வித்தியாசாகரின் இசையில் '' ராஜா ராஜா ரொக்கெட் ராஜா'' பாடல் பரவாயில்லை. அங்கங்கு துண்டுதுண்டாக வரும் தாயின் தாலாட்டுப்பாடல் மனதை இதமாய் வருடுகிறது. க.வேல்ராஜனின் ஒளிப்பதிவும் பளிச்சென பாராட்டக்கூடியது. ஆனால் அழுக்குப் போர்வை போர்த்தியபடி வரும் ஆந்திர வில்லன்களுக்கு பதில் தமிழ் சாயல் இருக்கும் வில்லன்களை காட்டியிருக்கலாம்.தமிழுக்கு ஏற்றமாதிரி காட்சி அமைப்பைத்தருவதில் இன்னும் முயற்சி செய்திருக்கலாம் இயக்குநர் சிவா

சிறுத்தை– சிரிப்பும் கைதட்டலுமாய் சீறுகிறது.

## 'இந்து ஒளி சிறப்பிதழ்' நாளை வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி'யின் தை-பங்குனி மாத இதழ் அருள்மிகு துர்க்கா தேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறும் இவ் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழாவின் போது 'இந்து ஒளி' சிறப்பிதழின் வெளியீடும் இடம் பெறும்.

தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் போது இந்து மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி.கயிலாச பிள்ளை தம்பதியினர் 'இந்து ஒளி' மகா கும்பாபிஷேக சிறப்பிதழை வெளியிட்டுவைப்பர். (ஸ்ரீ-2)

# பாவனையாளர் நலனுக்காகவே இராணுவத்தினர் மரக்கறி விற்பனையில் ஈடுபடுகின்றனர்

## அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பாவனையாளர் நலன்கருதி அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் வகையிலேயே இராணுவத்தினர் காய்கறி விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குப் பதிலாக நேற்று முன்தினம் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் பொறுப்பை அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா ஏற்றிருந்தார்.

இதன் போது இராணுவத்தினர் காய்கறி விற்பனையில் ஈடுபட்டுள்ளமை குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்த கருத்தை சுட்டிக் காட்டி ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.



அதற்குப் பதில் அளித்த அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்த கருத்தை சுட்டிக் காட்டி ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதில் அளித்த அமைச்சர் ஹர்ஷ டி சில்வா எதிர்க்கட்சியின் தேவையையே நிறைவேற்றி வருகின்றார் என்றார். அவருடைய பொருளாதாரக் கொள்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் எப்பொழுதும் மக்கள் நலனுக்காக பாவனையாளர்களுக்கு கூடிய வகையில் நிவாரணம் அளிக்கும் திட்டங்களையே மேற்கொண்டு வருகின்றோம். நாட்டில் சீரற்ற காலநிலை ஏற்படும் போது விவசாயம் பாதிக்கப்படுகிறது. அப்பொழுது பாவனைப் பொருட்களுக்கு தட்டுப்பாடுடன் விலை ஏற்றமும் ஏற்படுகின்றது.

இதனை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்ய விவசாயிகளிடமிருந்து உற்பத்தி பொருட்களை நேரடியாகக் கொள்வனவு செய்து இராணுவத்தினர் மூலம் குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றோம்.

இத்திட்டத்தை ஹர்ஷ டி சில்வா ஏற்றுக் கொள்ளாவிடின் அவர் அவரது வாக்காளர்களையே நிராகரிப்பதாகவே கருதவேண்டும்.

இவ்வாறான சலுகைகளை வழங்கவே முன்னர் மாக்பெட் கோப்பெட் சந்தைப்படுத்தல் திணைக்களம் போன்றவை இருந்தன. அவற்றை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இல்லாமல் செய்துவிட்டது.

எனினும் எமது அரசு எந்தளவுக்கு மக்களுக்கு சலுகை வழங்க முடியுமோ அவை அனைத்தையும் மேற்கொள்ளும் என அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நாடு முழுவதும் வேட்புமனுத்தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் மும்முரம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு உள்ளூராட்சி சபைக்குமாக மூன்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச சபைக்கும் கெஸ்பாவ பிரதேச சபைக்கும் ஜனசெத பெரமுன வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா நகரசபைக்கு எம்.எம். ரிஸ்வான் மொஹமட் தலைமை யிலான சுயேச்சைக்குழு வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது என தேர்தல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் வாக்காளர்கள் விண்ணப்பிக்கும் திகதி மேலும் நீடிக்கப்படாது என்றும் எதிர்வரும் 27ஆம் திகதி வரையே எவ் விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கட்சிகளாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்த அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்களில் 84 விண்ணப்பங்களைத் தேர்தல்கள் திணைக்களம் நிராகரித்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு மே மாதம் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய விண்ணப்பித்த கட்சிகளிலேயே 84 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஜனவரி மாதமும் புதிய கட்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தேர்தல் நடைபெறுவதற்கு அண்மித்த காலப் பகுதியில் விண்ணப்பங்கள் சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் சுமணசிறி தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கும் அரசியல் கட்சிகள் அரசியலில் ஆர்வம் காட்டுவதைப் போல கட்சி தொடர்பான கணக்கறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களைப் பேணுவதிலோ அல்லது அவற்றைச் சமர்ப்பிப்பதிலோ ஆர்வம் காட்டுவதில்லையென்றும் இதனால் பல கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியொன்றை விண்ணப்பிப்பதற்குத் தேவையான உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் சுமணசிறி மேலும் தெரிவித்தார்.

எனினும் நிராகரிக்கப்பட்ட கட்சிகள் மீண்டும் தம்மைப்பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து 658 மில்லியன் ரூபா வரி அறவீடு

(கொழும்பு)

நாட்டில் செயற்படும் 10 தொலைக்காட்சி நிறுவனங்கள் கடந்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டு திரைப்படம், நாடகங்கள் மற்றும் விளம்பரங்களை ஒளிபரப்பியதற்காக 685 மில்லியன் ரூபாவை வரியாக செலுத்தியுள்ளதாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் கேள்விக்கு பதிலளிக்கும் முகமாகவே இத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

கடந்த 2010 ஆம் ஆண்டில் மாத்திரம் குறித்த தொலைக்காட்சி நிறுவனங்கள் 126 மில்லியன் ரூபாய் செலுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி மஹாராஜா நிறுவனம் அதிகூடிய தொகையாக 389 மில்லியன் ரூபாவையும் இலங்கை ரூபாவஹினி கூட்டுத்தாபனம் இராண்டவது அதிகூடிய தொகையாக 89 மில்லியன் ரூபாவையும் குறித்த காலப் பகுதியில் செலுத்தியுள்ளன.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் 50 மில்லியன் ரூபா, ஈ.ஏ.பி.தனியார் நிறுவனம் 63 மில்லியன் ரூபா. ஈ.ஏ.ரி.நிறுவனம் 34 மில்லியன் ரூபா, குளோபல் நெட்வேர்க் நிறுவனம் 5 இலட்சம் ரூபாவையும் ஆர்ட் தொலைக்காட்சி நிறுவனம் 15 மில்லியன் ரூபா , ,பவர் ஹவுஸ் 13 மில்லியன் ரூபா, எம்.ஜி. எம்.ஆர். நிறுவனம் 1.2மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளன. (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான சோதனைச் சாவடிகள் அகற்றம்

கிழக்கு மாகாணத்தில் சில சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அநேகமான சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

கிழக்கில் நிலவிவரும் அமைதியான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே 30 சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டம் கட்டமாக ஏனைய சோதனைச் சாவடிகளும்அகற்றப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளையும் அகற்றுவதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சமாதான ஒப்பந்தம் குறித்து ஆராய முயன்ற இருவருக்கு விசா மறுப்பு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தம் தோல்வியுற்றமைக்கான காரணம் குறித்து ஆராய இலங்கை வரமுயன்ற நோர்வே நாட்டவர் இருவருக்கு அரசாங்கம் விசா மறுத்துள்ளது.


கடந்த 2002 ஆம் ஆண்டில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் தோல்வி குறித்து ஆராய நோர்வே நாட்டின் அரச சர்பற்ற நிறுவனமொன்றின் பிரதானிகள் இருவர் அண்மையில் இலங்கைக்கான விஜயத்துக்கு விசா அனுமதி கோரியிருந்தனர்.

நோர்வேயில் இயங்கும் மிசல்சன் எனும் அரச சார்பற்ற நிறவனத்தின் தலைவர் குனர் சோபார் மற்றும் அவரது பிரதி அதிகாரி ஆகியோரே அவர்களாவர். ஆயினும் அரசாங்கம் அவர்களுக்கான விசா அனுமதி மறுத்துள்ளது.

சமாதான ஒப்பந்தத்தின் தோல்வி குறித்து ஆராய்வதற்கான பொறுப்பை நோர்வே அரசாங்கமே அவர்களிடம் ஒப்படைத்துள்ளதாக அரசாங்கத்துக்கு சந்தேகம் எழுந்துள்ளதன் காரணமாகவே அவர்களுக்கான விசா மறுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-2)

Study & work in UK
Have you completed A/L ??? What next ???
April / May Intake 2011
COURSES ARE FROM £ 2950 AT HIGHLY TRUSTED & "A" RATED COLLEGES IN LONDON
BA (Hons) Business Administration (Awarded by University of Wales)
BSc - Technology & E-Commerce
MSc - Innovative Technology (Awarded by University of East London)
BA - Innovative Business
MBA - Innovative Management (Awarded by Conventry University)
BA (Hons) Accounting & Finance
BSc (Hons) Computing Science (Awarded by University of Staffordshire)
BSc (Hons) Hospitality Management (Awarded by University of Sunderland)
Health and Social Care & Many more...
LONDON 100% VISA GUARANTEED
SPONSOR
வசதியில்லாதவர்களுக்கு வழிகாட்டி ஆலோசனை தரப்படும்.
Offer letter will be arranged within 3 working day's
Minimum deposit required...
NO IELTS REQUIRED
Hotline : 077 155 3323
UK சென்று உங்கள் உயர்கல்வியை தொடர மிகக்குறுகிய காலத்தில் குறைந்த செலவில் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
BIBM
BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A.De Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital, Wellawatta.)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk | Web : www.bibm.lk

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுகிறார் ஒபாமா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் எதிர்வரும் 2012 இல் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா மீண்டும் போட்டியிடவுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா மீண்டும் போட்டியிட முடிவெடுத்துள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் சமீபத்தில் செய்தி வெளியிட்டது.

இந்தச் செய்தி உண்மைதான் என்று வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளது. வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவு செயலர் ராபர்ட் கிப்ஸிடம் எதிர்வரும் 2012 தேர்தலில் ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளதே என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் ஒபாமா போட்டியிட முடிவெடுத்துள்ளது உண்மைதான் என்றார்.

ஒபாமா தலைமையிலான சீரிய நிர்வாக நடவடிக்கையால் நாட்டின் பொருளாதாரம் போற்றத்தக்க வகையில் மீட்சியடைந்து வருகிறது. அது தடைப்படாமல் தொடர வேண்டுமானால் தான் ஜனாதிபதி பதவியில் நீடிக்க வேண்டும் என்று ஒபாமா விரும்புகிறார் என்று றொபர்ட் கிப்ஸ் கூறினார்.

ஜனாதிபதி ஒபாமா சிக்காக்கோவில் இருந்து தேர்தல் பிரசாரத்தை தொடங்கவுள்ளதாகவும் அதற்கான பணியை அவர் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டிருந்தது. கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசார ஏற்பாட்டுக் குழுவில் இடம் பெற்றிருந்தவர்களையும் தனது நம்பிக்கைக்குரியவர்களையும் வரும் தேர்தல் பிரசாரப் பணிக்கான ஏற்பாட்டில் ஈடுபடுத்த ஒபாமா திட்டமிட்டுள்ளதாகவும் அந்த பத்திரிகை தெரிவித்திருந்தது.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவி காலம் 4 ஆண்டுகள் பொதுவாக அந்நாட்டில் ஜனாதிபதியாக பதவியேற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்ததுமே அடுத்த தேர்தலை சந்திப்பதற்கான ஆயத்த பணியைத் தொடங்கிவிடுவர்.

அந்த வகையில் 2008 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஒபாமா எதிர்வ ரும் 2012 இல் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான பணியை இப்போதே தொடங்கிவிட்டார். (ஶ்ரீ-2)

## சதாம் ஹுசைனின் கதை திரைப்படமாகிறது

(லண்டன்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் 24 வருடங்கள் ஈராக்கில் ஆட்சி நடத்தினார். அமெரிக்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டார்.

இவர் ஜனாதிபதியாக இருந்த போது கடந்த 1979 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் 4 கதைகளை எழுதி புத்தகங்களாக வெளியிட்டார். அவை ஈராக்கில் பெருமளவில் விற்று சாதனை படைத்தன.

இந்த நிலையில் அவர் எழுதிய ஷபீபா அண்டு தி கிங், புரூனோ என்ற கதைகள் திரைப்படமாக தயாரிக்கப்படுகின்றன. பேரமவு ண்ட் ஆங்கில பட நிறுவனம் இவற்றை தயாரிக்க முடிவு செய்துள்ளது. (ஶ்ரீ-2)

## ஒசாமா பின்லேடனின் புதிய ஒலிநாடா வெளியீடு



(லண்டன்)

ஆப்கானிஸ்தானிலிருந்து பிரான்ஸ் தனது படைகளை விலக்கிக் கொள்ளாவிட்டால் தாங்கள் பிடித்து வைத்துள்ள பிரான்ஸ் நாட்டவர்களை கொன்று விடுவதாக அல்குவைதா பயங்கரவாத இயக்க தலைவர் ஒசாமா பின்லேடன் வெளியிட்டுள்ள ஒலிநாடாவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக லண்டனில் இருந்து வெளிவரும் டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த ஒலிநாடாவில் ஒசாமா கூறியிருப்பதாவது,

இதன்மூலம் பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசிக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் இதற்குமேல் ஆப்கானிலிருந்து படைகளை திரும்பப் பெறாவிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்று தெரிவித்துள்ளார். (ஶ்ரீ)

## "திபெத் விவகாரத்தில் தலையிடாதீர்கள்" ஒபாமாவுக்கு சீன ஜனாதிபதி பதிலடி



(வோஷிங்டன்)

திபெத் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துமாறு ஒபாமா கூறியுள்ள நிலையில் திபெத் விவகாரத்தில் தலையிடாதீர்கள் என்று அவருக்கு சீன ஜனாதிபதி பதிலடி கொடுத்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஹு ஜின்டாவோ 4 நாட்கள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேசினார். அப்போது திபெத் விவகாரத்தில் சுமூக தீர்வு ஏற்பட திபெத் ஆன்மீக தலைவர் தலாய்லாமாவுடன் பேச்சு நடத்துமாறும் மனித உரிமை விடயங்களுக்கு மதிப்பு அளிக்குமாறும் சீன ஜனாதிபதியை ஒபாமா வலியுறுத்தினார்.

இந்நிலையில் இதற்கு வோஷிங்டனில் நேற்று முன்தினம் சீன ஜனாதிபதி பதிலடி கொடுத்தார். அமெரிக்க சீன வர்த்தக கவுன்சில் கூட்டத்தில் அவர் பேசியதாவது,

திபெத் ,தாய்வான் ஆகியவை சீனாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு சம்பந்தப்பட்ட விவகாரங்கள். அவை, சீனாவின் நலன்கள் சம்பந்தப்பட்டவை. 130 கோடி சீனர்களின் உணர்வுடன் தொடர்புடையவை.

எனவே திபெத் , தாய்வான் ஆகிய விவகாரங்களில் இருந்து அமெரிக்கா ஒதுங்கி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா - சீ[illegible] இடையிலான நட்புறவு பாதிக்கப்படும். இருநாட்டு உறவு எப்போதும் பதற்றத்துடனே இ[illegible]கும்.


சீனாவின் உணர்வுகளை புரிந்து கொண்டு கஷ்டப்பட்டு நாம் போராடி பெற்ற நட்புறவை பாதுகாக்க அமெரிக்கா பாடுபடும் என்று நம்புகிறோம். அமெரிக்காவும் சீனாவும் வெவ்வேறு வரலாறு, கலாசாரம் கொண்டவை. எனவே கருத்து வேறுபாடு எழுவது இயல்பு தான்.

எனவே பொறுப்புணர்வுடன் இருதரப்பு உறவை அணுக வேண்டும். எந்த தனிப்பட்ட சம்பவத்தாலும் நமது உறவு பாதிக்கப்படுவதை தடுக்க வேண்டும். பரஸ்பர நம்பிக்கை மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். முட்டுக் கட்டைகளை அகற்ற வேண்டும். இவ்வாறு ஹு ஜின்டாவோ தெரிவித்தார். (ஶ்ரீ-2)



அல்பேனியா நாட்டில் ஆளும் கட்சியினர் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டதாக எழுந்த புகாரையடுத்து அந்நாட்டு துணைப்பிரதமர் லைராமெட்டா தனது பதவியை இராஜினாமா செய்தார். எனினும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## 11 வருடங்களின் பின்னர் பேச்சாற்றல் பெற்ற பெண்



கலிபோர்னியாவைச் சேர்ந்த பெண் ணொருவர் சுமார் 11 வருடங்களுக்குப் பின்னர் சத்திர சிகிச்சையின் மூலம் தனது குரலினை மீளப் பெற்றுள்ளார். மிகவும் சிரமமானதாகவும் அரிதானதாகவும் கருதப்படும் குரல் மாற்று சத்திரசிகிச்சையின் மூலமே அவர் தன் குரலினை மீளப் பெற்றுள்ளார்.

பிரெண்டா ஜென்ஸன் வயது (52) என்ற அப்பெண்மணிக்கு கலிபோர்னிய பல் கலைக்கழக டேவிஸ் மருத்துவ மையத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் சுமார் 18 மணித் தியாலயங்கள் சத்திரசிகிச்சை இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர் 13 நாட்களுக்கு பின்னர் அவர் தனது முதல் வார்த்தையை உச்சரித்துள்ளார். தற்போது பேச்சாற்றலை முழு வதாக பெற்றுள்ள அவர் நேற்று முன்தினம் இச்சிகிச்சையினை மேற்கொண்ட வைத்திய குழுவினை சந்தித்துள்ளார்.

சுமார் 11 வருடங்களுக்கு முன்னர் இப் பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக சத்திரசிகிச்சையைத் தொடர்ந்தே இவர் பேச்சாற்றலை இழந்துள்ளார். மருத்துவ வரலாற்றில் இதற்கு முன்னர் இச்சத்திர சிகிச்சையானது 1998 ஆம் ஆண்டிலேயே வெற்றிகரமாக நடைபெற் றுள்ளது. (ஶ்ரீ-2)

## சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்திருந்தோர் விபரங்களை வெளியிட்டுள்ளவர் கைது

சுவிஸ் வங்கியில் இரகசியக் கணக்கு வைத்திருந்தவர்களின் பட்டியலை விக்கிலீக்ஸ் இணையத் தளத்துக்கு வழங்கிய அந்த வங்கியின் முன்னாள் அதிகாரி ருடால்ப் எல்மர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

உலகத்தில் உள்ள செல்வந்தர்கள் சுவிஸ் வங்கிகளில் ஏராளமான கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ளனர். இந்த வங்கிகளில் பணம் போட்டவர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். அந்த நாட்டு விதிமுறைப்படி வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்கள் யாருக்கும் வெளியிடப்படமாட்டாது.

சுவிஸ் வங்கி முன்னாள் அதிகாரி ருடால்ப் எல்மர் சுவிஸ் வங்கிக்கணக்கில் வைத்திருப்பவர்களின் பட்டியலை சிடியில் பதிவு செய்து அதனை விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜீலியன் அசேஞ்சிடம் வழங்கியுள்ளார்.

சுவிற்ஸர்லாந்து நாட்டின் சட்ட விதிமுறையை மீறி வங்கிகளில் இரகசிய கணக்கு வைத்திருந்தவர்களின் பெயரை வெளியிட்டதற்காக ருடால்ப் எல்மரை பொலிசார் கைது செய்துள்ளனர். சுவிஸ் வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பட்டியலை வெளியிட்ட விபரத்தை ருடால்ப் நீதிமன்றில் ஒப்புக் கொண்டார்.

முன்னதாக இவர் மீது தொடரப்பட்ட வழக்கில் இவருக்கு மூன்று இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இதை கட்டத் தவறினால் இரண்டு ஆண்டு சிறைத் தண்டன அனுபவிக்கும்படி கோர்ட் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் ருடால்ப் செய்த காரியம் சர்வதேச குற்றமாகக் கருதப்படுவதால் அவர் மீது தற்போது குற்றவியல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

ஏறிய ஏணியை எட்டி உதைக்கக் கூடாது.

-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்களைக் கீறி எங்களில் படிக்கும் எங்கள் ஊர் மருத்துவ மாணவர்களுக்கு...

அன்பு மிகு மருத்துவத்துறை மாணவர்களுக்கு வணக்கம். முன்பும் ஒருமுறை உங்களுக்குக் கடிதம் எழுதிய ஞாபகம். எனினும் மீண்டும் ஒரு முறை உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டிய கட்டாயத்தில் இதனை எழுதுகின்றோம்.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் மூன்றுமாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை இந்த நாட்டின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாட்டி வைத்தார்.

ஒரு காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஐந்து மாடிக் கட்டடத்தொகுதி என்று சதா உச்சரித்து வாய் சலித்துப்போனதை மறந்து கொண்டிருக்கும் வேளையில், மூன்று மாடிக் கட்டடத் தொகுதி பற்றிப் பேச விளைந்துள்ளோம்.

ஜப்பானின் நிதி உதவியுடன் அமையப்போகும் இம் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி பூரணமாக நிறைவடையும் என்ற நம்பிக்கை இருப்பதை, அங்குரார்ப்பண நிகழ்வுகள் உறுதி செய்துள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமையவுள்ள மூன்று மாடிக் கட்டடத்தொகுதியில் என்னென்ன பிரிவுகள் இயங்கவுள்ளன என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பட்டியல்படுத்தி பத்திரிகையில் வெளியிட்ட தகவலைப் பார்த்தபோது,

அட! நோய்வந்தாலும் பரவாயில்லை என்ற தடிப்பு ஏற்பட, அந்தத் தடிப்பில் ஏற்கெனவேயிருந்த மெல்லிய பிறசரும் பறந்துபோனது.

எங்கள் மண்ணில் இருக்கக்கூடிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை எழுச்சி பெறப்போகிறது என்ற பேச்சில் எழும் சக்தி எங்கள் ஆரோக்கியத்திற்கு அடித்தளமும் அவசியமும் ஆகும்.

அதேநேரம், அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றிய சுகாதார அமைச்சர், வடபகுதி மருத்துவர்கள் தங்கள் மண்ணில் பணியாற்ற மறுப்பது வேதனைக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டத்தைப் பெற்றவுடன் என்னைச் சந்தித்து எங்களுக்கு தென்பகுதியில் பணியாற்ற இடம்தாருங்கள் எனக் கேட்கின்றனர். இஃது எனக்குப் பெரும் தலையிடியாக இருக்கிறது எனக் கூறியுள்ளார்.

தென்பகுதியில் கடமையாற்ற விரும்பும் அன்புக்குரிய வடபகுதி டாக்டர் பெருமக்களே! தென்பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் எங்களின் மனநிலையை எவ்வாறு துலாம்பரப்படுத்தியுள்ளார் பார்த்தீர்களா?


ஆம், சுகாதார அமைச்சருக்கே தலையிடி கொடுக்கும் டாக்டர்களாகவே நாங்கள் இருக்கின்றோம். ஏன்தான் இப்படி?

எங்கள் உடலைக்கீறி எங்களில் தானே படிக்கிறீர்கள்! நீங்கள் கீறும்போது எது நடந்தாலும் அது எங்களுக்குத்தான் சமர்ப்பணம். இவ்வாறு எங்களிடம் படித்துவிட்டு தென்பகுதியில்-வெளிநாடுகளில் சேவையாற்ற உங்களுக்கு எப்படித்தான் மனம் வருகிறது.

வாழ்க்கைக்குப் பொருளாதாரம் அவசியம் என்பது உண்மையாயினும் மனிதனுக்கு இலட்சியம் பிரதானம்.

'எனது மண், எனது மக்கள், எனது உறவு என்ற சிந்தனை இல்லாத எவரும் பிறப்பையும் இறப் பையும் தொழிலாகக் கொண்டு பிறருக்கு அலைச் சல் செய்வரே அன்றி வேறு எதுவும் அவர்களால் நடப்பதில்லை' என்ற எமது பித்தளை மொழியை (இது பொன் மொழியல்ல) ஒருகணம் சிந்தியுங்கள்.

# ஆர்மிடேஜ்- மகிந்த சந்திப்பு பின்னணி குறித்து சந்தேகம்



அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சாட் ஆர்மிடேஜ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்ததின் பின்னணி குறித்து சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சாட் ஆர்மிடேஜ் கடந்த 18ஆம் திகதி மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் றொமேஸ் ஜெயசிங்கவும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் இச்சந்திப்புக் குறித்த புகைப்படத்தை அரசாங்கத்தின் இணையத்தளம் கடந்த 18ஆம் திகதி வெளியிட்டிருந்த போதிலும் ஏனைய ஊடகங்களுக்கு இப் புகைப்படங்கள் நேற்று முன்தினமே வழங்கப்பட்டுள்ளன.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அதிகாரியிடம் கேட்டபோது அவர் இக் கேள்விக்கான உரிய பதிலை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த ரிச்சர்ட் ஆர்மிடேஜின் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து அரசாங்கம் இதுவரை போதிய தகவல்களை வெளியிடவில்லை.

2001ஆம் ஆண்டுமுதல் 2005 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் 13வது பிரதி இராஜாங்க அமைச்சராக ஆர்மிடேஜ் பணியாற்றினார்.

இதன் பின்னர் முரண்பாடுகளுக்கான சர்வதேசக் குழுவின் சபை உறுப்பினராக இருந்த இவர் தற்போது ஆர்மிடேஜ் இன்ரநஷனல் என்னும் சர்வதேச வர்த்தக அபிவிருத்தி, தந்திரோபாயத் திட்டமிடல் மற்றும் இராஜதந்திர நெருக்கடிகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களில் ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலங்கையில் மனித உரிமை மீறல் ஐ.நா. கூட்டத் தொடரில் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் போது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அதன் தலைவர் தாக்கல் செய்ய உள்ளதாக தெரியவருகிறது.

இந்த அறிக்கை 900 பக்கங்களை கொண்டது எனவும் கூறப்படுகிறது. கடந்த மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட யோசனை தோற்கடிக்கப்பட்டது. அப்போது யுத்தம் முடிபடைந்திருந்த போதிலும் யுத்தம் தொடர்பான தகவல்கள் கசிந்திருக்கவில்லை.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை அந்த குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் முன்வைக்கப்பட வில்லை.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே நிபுணர்கள் குழு நியமிப்பதாக அந்த குழுவை நியமித்த போது ஐ.நா. செயலாளர் நாயகம் குறிப்பிட்டிருந்தார்.

நிபுணர்கள் குழுவின் கால எல்லையும் அதிகரிக்கப்பட்டது. போர் குற்றங்கள் இடம் பெற்றதாக புலம் பெயர் தமிழர்கள் தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி வருகின்றனர். இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் புலம் பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்காக நீதி மன்றத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷவிடம் போர் குற்றம் குறித்து விசாரணை நடத்துமாறு சர்வதேச மன்னிப்புச் சபை அமெரிக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்


ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஸ்ரீ மோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9-72)

# மனமாற்றம் தரும் புதுவாழ்வு

இறைவன் உலகை உண்டாக்கினார். அந்த அழகான உலகை பல அணிகலன்களைக் கொண்டு அலங்கரித்தார். அவரால் படைக்கப்பட்ட உலகை கண்ணோக்கினார். அனைத்தையும் நல்லதெனக் கண்டார். படைப்புகளில் அதிசிறந்த படைப்பாக மனிதனை பார்த்தார். ஆனால் நாளடைவில் மனிதன் தன் சுதந்திரத்தினை தவறாக பயன்படுத்த ஆரம்பித்தான். இருந்தாலும் மனிதன் புனிதனாக வாழவேண்டுமென்பதே மனிதனை உண்டாக்கிய இறைவனின் தணியாத விருப்பமாக இருந்தது. தனது விருப்பம் நிறைவேற பல்வேறுபட்ட வரலாற்று நிகழ்வுகளினூடாக, அறிகுறிகளினூடாக, வெளிப்படுத்தல்களினூடாக, மனிதர்களினூடாக இறைவன் மனிதனுடன் பேசினார். தனது திட்டத்தையும், விருப்பத்தையும் மனிதனுக்கு தெளிவுபடுத்தினார். ஆனால் இறைவன் எதிர்பார்த்த பதில் மனிதனிடமிருந்து கிடைக்கவில்லை. மனிதனில் உண்மையான அன்பு கொண்ட இறைவன் இறுதியில் தன்னுடைய மகன் கிறிஸ்து மூலம் தனது செய்தியை மனிதனுக்கு வெளிப்படுத்த அவரை இவ்வுலகிற்கு அனுப்பினார். மண்ணிற்கு வந்த இறைமகன் காலம் நெருங்கியபோது அந்த மாபெரும் செய்தியை உலகிற்கு வெளிப்படுத்தினார். 'மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது.'(மத் 4:17)

மனமாற்றம் என்பது ஒரு பயணம். அது இருளிலிருந்து ஒளியை நோக்கிய, பாவத்திலிருந்து புனிதத்தை நோக்கிய, சாவிலிருந்து வாழ்வை நோக்கிய வெறுப்பிலிருந்து அன்பை நோக்கிய ஒரு முடிவில்லாப் பயணம். தனது பணியின் தொடக்கத்திலேயே மனமாற்றத்திற்கு அழைத்த இயேசு அதற்கான பதிலை எதிர்பார்க்கப்பட்டவர்களிடமிருந்து பெறமுடியவில்லை. காரணம் அவர்கள் இவ்வுலகை அதிகமாகப் பற்றிக் கொண்டிருந்தார்கள். தங்கள் சமயத்திலும், கலாசார பண்பாடுகளிலும் அளவுக்கதிமான சட்டதிட்டங்களைக் கொண்டிருந்தார்கள். கடவுள்மேல் கொண்டிருந்த நம்பிக்கையால் அல்லமாறாக தங்கள் பிழைப்பைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் தக்கவைத்துக் கொள்வதற்காகவுமே.

இந்த நிலையில் இயேசுவினுடைய அழைப்பு வேரோட்டமான மனமாற்றத்திற்கான அழைப்பாக காட்சி தருகிறது. வாழ்வின் பார்வைகள், தேடல்கள், புரிதல்கள் என்பனவே வாழ்வின் எல்லா அசைவுகளுக்கும் பொருள் தரவேண்டும் என்பதை இயேசு வலியுறுத்துகிறார். இவ்வாழ்வுக்கான மனநிலையை ஏற்றுக் கொள்வது தான் மன மாற்றத்துக்குரிய அழைப்புக்கான பதில் என்பதையும் இயேசு முன் நிறுத்துகிறார். இன்று நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?



பாவயிருள் சூழ்ந்த உலகிற்கு வலுச்சேர்த்து, அழிவை நோக்கியே நாம் பயணிக்கின்றோம் என்றால் மிகையாகாது.

பிறர்வாழ்வில் தீமை நினைக்கும் எமது சுயநலப்போக்கில் இருந்து நாம் விடுபட வேண்டும். எமது அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் இடையேயான முரண்பாடுகள் களையப்பட மனமாற்றம் வேண்டும். அழிவுக்கலாசாரத்தினுள் சிக்கி, வாழ்வைத் தொலைத்து, எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் எமது இளஞ்சமுதாயத்தினருக்குள் ஒரு மாற்றம் வேண்டும். என் பின்னே வாருங்கள் (மத் 4:19) என்ற இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இயேசுவை பின் சென்ற சீடர்களைப் போல, நாமும் எம்மை வெறுமையாக்கி, மனம் மாறி இயேசுவின் அழைப்புக் கேற்ப எம்வாழ்வை மாற்ற இயேசுவின் இறையாட்சிப் பயணத்தில் பங்கெடுப்போம். புதுவாழ்வின் மூலமாக இம்மண்ணகத்தில் விண்ணகத்தைக்

## பரமபிதா காட்டிய பாதை

அருட்சகோ. ரமேஸ் அ.ம.தி

எத்தனை ரகம்!
எத்தனை வர்ணம்!!

அத்தனையும் புத்தம்புதிய 2011 ஆம் ஆண்டின் ரகம்.
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
கூறைப்பட்டுச் சேலைகள்
பட்டு வேட்டிகள்
காஞ்சிபுரம் சேலைகள்
வித்தியாசமான புதிய கோலம் சேலைகள்
உங்கள் தெரிவிற்கு...
நாடுங்கள்...
காவேரி சில்க்ஸ்



காவேரி சில்க்ஸ்
48, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.


# தவளை பாதி... நண்டு பாதி... கலந்த கலவை கண்டுபிடிப்பு

அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட கத்தி மீன், தவளை நண்டு ஆகியவை 116 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்திய கேரள மாநிலத்தை ஒட்டி வங்கக் கடலில் இவை இருப்பது தெரிய வந்துள்ளது. ஆழ்கடலில் இருக்கும் மீன், நண்டு உள்ளிட்ட உயிரினங்கள் பற்றி மத்திய கடல்வாழ் உயிரின ஆராய்ச்சிக்கழகம் தொடர்ச்சியாக ஆய்வு செய்து வருகிறது.

'சாகர் சம்ப்டா' என்ற ஆராய்ச்சிக் கப்பலின் உதவியுடன் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கேரள மாநிலம் கொச்சி அருகே வங்கக்கடலில் சமீபத்தில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அழிந்துவிட்டதாகக் கருதப்படும் ஒருவகை வவ்வால் மீன், கத்தி மீன், தவளை நண்டு ஆகியவை தற்போதும் இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த உயிரினங்கள் ஆழ்கடலில் சுமார் 265 மீற்றர் முதல் 457 மீற்றர் ஆழத்தில் வாழக்கூடியவை. 116 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் மேலும் கூறியதாவது, உலகின் பல பகுதிகளிலும் வவ்வால் மீன்களில் 9 வகைகள் இருக்கின்றன.

இதில் 4 வகை இந்தியாவில் உள்ளவை. இவை கடல் பாசி, நுண்ணிய கடல் வாழ் புழுக்கள், மிகச்சிறிய மீன்களை உணவாகக் கொள்பவை. இந்தியப் பெருங்கடல், பசுபிக் பெருங்கடல், செங்கடல் மற்றும் வியட்நாம், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, தைவான், சீனாவை ஒட்டி அதிகம் காணப்படுகின்றன.

மன்னார் வளைகுடாவில் அதிகம் இருப்பவை கத்தி மீன், வெள்ளி நிறத்தில் தட்டையாக இருக்கும். பெரும்பாலும் பவளப்பாறை, அதிக சேற்றுப் பகுதியில் உயிர்வாழும். மீன்களைப்போல் நீந்தாமல், செங்குத்தாக நீந்தும். இவற்றை சாப்பிட முடியாது. அழகுக்காக வளர்க்கப்படுபவை.


www. mideamart.com

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.



Toshiba mini Laptop
Atom Intel 1.6Ghz
Dos
1GB
250GB
Nill
128MB
webCamera With Mic
10.1"
WIFI Blue Tooth
Rs.46,900.00



COMPACO620 Laptop
Intel Core 2 Duo 2.2
Dos
2GB
320GB HDD
DVD Writer
796MB
web Camera With Mic
15.6"
WIFI Blue Tooth
Rs.71,900.00

ACER5742 Laptop
Intel core i3
Win 7 Home Basic
VGA 1GB HD Grap
RAM 3GB
H.D 500GB
web Camera With Mic
Wifi
DVD super multi
6-cell li-on battery
Rs.75,000.00

HP Probook 4520s
Intel core i3
Win7 Home Basic
VGA 1GB HD Grap
RAM 2GB
G.D 320GB
DVDWriter
Wifi
web Camera With Mic
LCD 15.6"
Rs.90,900.00

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL CORE 2 DUO | INTEL CORE i3 | INTEL CORE i5 | HP Pavillon dv6t 3200 |
|---|---|---|---|---|---|
| Processor | Intel Dualcore 3.0 GHZ | Intel core 2 Duo 2.93 GH | INTEL CORE i3 3.06Ghz | Intelcore i3 3.06Ghz | Intelcore i3 |
| Mother board | Intel Chipset G31 | Intel Chipset G31 | Intel DH55PJ | Gigabyte Board | Win 7 Home Basic |
| Memory | 1GB DDR-II, 800 MHZ | 1GB DDR-II, 800 MHZ | 2GBDDR -III | 2GBDDRIII | VGA 1GB HD Grap |
| Hard disk | 320 GB SATA-7200 RPM | 320 GB SATA-7200 RPM | 320GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | RAm 4GB |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W E marck | ATX 500W E marck | HD 500GB |
| Casing | ATX 500W E marck | ATX 500W E marck | LG DVD Writer | LG DVD Writer | Web Camera with Mic |
| Monitor | 15.5" Acer LCD | 19" LG LED | 18.5" Samsung LED | 18.5" Samsung LED | DVD Super Multi |
| Key board | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | LCD 15.6 |
| Mouse | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Wifi |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | 6-cell li-on battery |
| Price | Rs.41,900.00 | Rs.50900.00 | Rs.55,900.00 | Rs.65,900.00 | Rs.104,900.00 |

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோகம்



No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646
E-mail: midea21@gmail.com

# உலக கிண்ணத்திற்கு அரங்குகள் தயார் இலங்கை கிரிக்கெட் சபை அறிவிப்பு

உலகக்கிண்ணச் சுற்றுத் தொடருக்கு இலங்கையிலுள்ள அரங்குகள் தயாராகிவிட்டதாகக் கூறும் இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் டி.எஸ்.டி சில்வா சில பத்திரிகைகள் பிழையான செய்திகளை வெளியிட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

பி.வி.சி. சிங்கள சேவையிடம் இது தொடர்பாகப் பேசிய அவர் மேற்படி பத்திரிகைகள் கூறுவதை உண்மையாக கருத்திற் கொள்கிறீர்களா? அப் பத்திரிகைகள் ஒன்றாவது நல்லதாக எதையும் கூறியுள்ளனவா? அவர்கள் தவறான செய்திகளை வெளியிட்டால் நான் என்னசெய்யமுடியும் எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடருக்கான 15 அரங்குகளில் 05 அரங்குகளின் நிர்மாணப் பணிகள் உரிய இலக்கை அடையத் தவறியுள்ளதாக ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாரூன் லோகாா்ட் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எவரும் மைதானங்களுக்குச் செல்வதை நாம் தடுக்கவில்லை. அவர்கள் அங்கு சென்று பார்த்துவிட்டு தமது செய்திகளை எழுதலாம் என டி.எஸ்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான ஆர். பிரேமதாஸ, பல்லேகல அரங்கு ஆகியன 99 சதவீதம் பூர்த்தியடைந்துவிட்டன. ஹம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ அரங்கு விரைவில் தயாராகிவிடும் என நம்புகிறேன் என அவர் கூறியுள்ளார்.

அண்மையில் மேற்படி அரங்குகளுக்கு விஜயம் செய்த ஐ.சி.சி ஆடுகள நிபுணர் அன்டி அட்ஹின்ஸன் உட்பட ஐ.சி.சி. அதிகாரிகள் அரங்குகள் குறித்து திருப்தி தெரிவித்ததாகவும் . டி.எஸ்.டி சில்வா கூறியுள்ளார்.

# முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி

பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

வெலிங்டன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் பாகிஸ்தான் அணி 37.3 ஓவர்களில் 124 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. மிஸ்பா உல் ஹக் மாத்திரம் அரைச்சதம் குவித்தார்.

பாகிஸ்தான் அணியின் 4 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 3 வீரர்கள் ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து பந்துவீச்சாளர்களில் டிம். சௌத்தி 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 17.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஜெசி ரைடர் 34 பந்துகளில் 55 ஓட்டங்களைப் பெற்றார். மார்டின் குப்தில் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் ரோஸ் ரெயிலர் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

டிம்.சௌத்தி இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். 6 போட்டிகள் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# டக்வேர்த்-லூயிஸ் முறையில் தென்னாபிரிக்க அணி வெற்றி

## இந்தியா பரிதாபம்

(போர்ட் எலிசபெத்)

நான்காவது ஒருநாள் போட்டியில் சொதப்பலாக ஆடிய இந்திய அணி தென்னாபிரிக்காவிடம் டக்வேர்த் லூயிஸ் விதிமுறைப்படி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. 87 ஓட்டங்கள் விளாசிய விராட் ஹோலியின் ஆட்டம் வீணானது.

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள இந்திய அணி 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளின் முடிபில் இந்தியா 2:1 என முன்னிலையிலிருந்தது. நேற்று முன்தினம் போர்ட் எலிசபெத்தில் நான்காவது போட்டி நடந்தது.

**விஜய் நீக்கம்**

இந்திய அணியில் முரளி விஜய் நீக்கப்பட்டு பார்த்திப் பட்டேல் வாய்ப்புப் பெற்றார். தென்னாபிரிக்க அணியில் இங்ராம், பார்னலுக்குப் பதிலாக வான்விக், றொபின் பீற்றர்சன் இடம்பெற்றனர். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் சிமித் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**நல்ல ஆரம்பம்**

தென்னாபிரிக்க அணிக்கு அம்லா, சிமித் இணைந்து நல்ல ஆரம்பம் தந்தனர். முதலில் அடக்கி வாசித்த அம்லா போகப்போக அதிரடி காட்டினார். முனாப் பட்டேல் வீசிய போட்டியின் எட்டாவது ஓவரில் வரிசையாக மூன்று பவுண்டரி விளாசினார். முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் நெகராவின் பந்தில் ஹர்பஜனின் அருமையான பிடியில் சிமித் (18) ஓட்டங்களுடன் வெளியேறினார்.

**விக்கெட் சரிவு**

இதற்குப் பின் இந்தியாவின் ஆதிக்கம் ஆரம்பமாக தென்னாபிரிக்க விக்கெட்டுக்கள் வரிசையாக சரிந்தன. வான்விக் (15), யுவராஜ் சுழலில் வீழ்ந்தார். அரைச்சதம் கடந்த அம்லா 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

**எப்படி அவுட்?**

பின் யுவராஜ் பந்தில் டிவில்லியர்ஸ் (3) குழப்பமான முறையில் ஆட்டமிழந்தார். இம்முறை பந்தைப் பிடி எடுத்த தோனி, பின் 'ஸ்டம்பிங்கும்' செய்தார். "ரீப்ளே" பார்த்த போது பந்து துடுப்பில் படவில்லை. ஸ்ரொம்பிங் தான் சரியானதாகவிருந்தது.

ஆனால் பிடி அடிப்படையில் நடுவர்சைமன் டாபெல் ஆட்டமிழப்புக் கொடுத்தார். பிளசிஸ் (1) ஓட்டத்துடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 22.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் எடுத்துத் தத்தளித்தது.

**டுமினி அபாரம்**

பின் டுமினி, போத்தா இணைந்து அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். இவர்கள் 6 ஆவது விக்கெட்டுக்கு 70 ஓட்டங்கள் சேர்த்தனர். யுவராஜ் பந்தில் போத்தா (44) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த றொபின் பீற்றர்சன் 31 ஓட்டங்கள் எடுத்தார். பொறுப்பாக ஆடிய டுமினி அரைச் சதம் கடந்தார். இவர் முனாப் வீசிய கடைசி ஓவரில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து அசத்தினார்.

தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 265 ஓட்டங்கள் எடுத்தது. டுமினி (71) ஸ்டைன் (4) ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். இந்தியா சார்பில் யுவராஜ் அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**திணறல் ஆரம்பம்**

சவாலான இலக்கை விரட்டிய இந்திய அணி திணறல் ஆரம்பம் கண்டது. முதல் வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் ஏனோ தானோ என ஆடினர். ரிசொற் சோபேயின் வேகத்தில் ரோகித் சர்மா (1) வெளியேறினார். படுநிதானமாக ஆடிய பார்த்திவ் படேல் (11) அதிக நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. போத்தா பந்துவீச்சில் ஒரு சிக்ஸர் அடித்த யுவராஜ் (12), அதே ஓவரில் ஸ்மித்தின் கலக்கல் பிடியில் ஆட்டமிழந்தார்.ரெய்னா (20), தோனி (2) சொதப்பினர். கடந்த போட்டியில் அதிரடி காட்டிய யூசுப் பதான் இம்முறை 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஒருபக்கம் விக்கெட் விழுந்தாலும் மறுபக்கம் துணிச்சலாகப் போராடிய விராத் ஹோலி அரைச்சதம் கடந்தார்.

**மழை குறுக்கீடு**

இந்திய அணி 31.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 137 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதையடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின் ஆட்டம் ஆரம்பமாகிய போது, 46 ஓவர்களில் 260 எடுக்க வேண்டும் என இலக்கு மாற்றப்பட்டது.

மீண்டும் மழை பெய்ய ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது இந்திய அணி 32.5 ஓவரில் 06 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை எடுத்திருந்தது. விராத் ஹோலி (87), ஹர்பஜன் (03) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டத்தைத் தொடர வாய்ப்பு இல்லாததால் டக்வேர்த் லூயிஸ் விதிமுறைப்படி தென்னாபிரிக்க அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து தென்னாபிரிக்க அணி தொடரில் 2:2 என சமநிலையை எட்டியது. ஆட்ட நாயகன் விருதை டுமினி வென்றார்.

**அதிவேக '2000'**

நேற்று முன்தினம் தென்னாபிரிக்க வீரர் அம்லா 24ஆவது ஓட்டங்களை எடுத்தபோது, ஒருநாள் போட்டிகளில் அதி வேகமாக 2000 ஓட்டங்களைஎடுத்தவர் வரிசையில் முதலிடம் பிடித்தார். இவர் 41 போட்டிகளில் பங்கேற்று இச் சாதனையைப் படைத்தார்.

இப் பட்டியலில் ஜகிர் அபாஸ் (பாக்.) இரண்டாவது இடத்தில் உள்ளார். இவர் 45 போட்டியில் பங்கேற்று இச் சாதனையைப் படைத்தார்.

**எட்டுப் பந்துவீச்சாளர்கள்**

நேற்று முன்தினம் இந்திய அணியில் எட்டுப்பேர் பந்துவீசினர். அணித்தலைவர் தோனி, பார்த்திப் படேல், விராத் ஹோலி மூவர் மட்டும் பந்து வீசவில்லை. சகிர், முனாப், நெகரா, ஹர்பஜன் உள்ளிட்ட முழுநேர பந்துவீச்சாளர் தவிர யுவராஜ், யூசுப்பதான், ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா உள்ளிட்ட பகுதிநேர பந்துவீச்சாளர்களும் பந்துவீசினர்.

# டெங்கு நோயினால் 34ஆயிரம்பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோய் காரணமாக 34ஆயிரத்து 105 பேர் நாடு முழுவதிலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 246 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாவட்டத்தில் 5ஆயிரத்து 942 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 3ஆயிரத்து 957 பேரும் யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரத்து 007பேரும் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளனர். (ந-5)

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இச்சம்பவம் நேற்று மாலை 4.20 மணியளவில் யாழ். தபாலகத்திற்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்களில் பயணித்த நாவாந்துறையைச்சேர்ந்த சா.அன்ரனி (வயது-63) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-6)

# இலங்கைக்கு...

பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியக்கடற்படையினரும் கரையோர பாதுகாப்புப் பிரிவினரும் இலங்கைக் கடற்படையினரின் அத்து மீறல்களை வேடிக்கை பார்த்துவருவதாக குற்றம் சுமத்தியுள்ள அவர்,

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப் பல்லவா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய ஆளும் கட்சியின் வெளியுறவுக் கொள்கை மற்றும் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான நிலைப்பாடு ஆகியன ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையப்பெறவில்லை எனவும் வைகோ சுட்டிக் காட்டியுள்ளார். (ந-5)


G.C.E. O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட வகுப்புகள்

2011 Academic Year

புத்தாண்டில் உங்கள் முதல் ஆரம்பம்

Computer கல்வியில் தொடங்கட்டும்

* Diploma Awarded by CSC Computer Education, India.

CSC COMPUTER EDUCATION

An ISO 9001 : 2000 Certified Institution

Direct Start

| | |
|---|---|
| Diploma in PC Professional | 4 Months |
| Tally Financial Accounting Program | 2-3 Months |
| Advanced Diploma in JAVA Programming | 4 Months |
| Advanced Diploma in Hardware & Networking | 2-3 Months |

60% Discount




Application - Graphics - Multimedia

Softview Visual Communication

| | |
|---|---|
| Adv. Diploma in Digital Pre-Press | 3 Months |
| Diploma in Video Production | 3 Months |
| Diploma in Office Automation | 4 Months |
| Adv. Diploma in Macromedia Application | 4 Months |
| Professional Dip. in Graphic Design | 4 Months |

60% Discount

Diploma in MS Office Application | Diploma in Web Design & Development | Diploma in Computerised Accounting

அனைத்து பாடநெறிகளுக்கும் காலம்: 2 மாதம்

பதிவுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு,

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | 230,1ம் மாடி கண்டி வீதி சாவகச்சேரி T.P :021-2270267 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

# யாழில் நடக்கும் வன்முறைக்கு...

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் எனக்கு பணிப்புரை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பாதாள உலகக் குழுக்கள் எவையும் இல்லை.ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் சில நபர்களே கொள்ளை மற்றும் களவுகளில் ஈடுபடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளதால் அரசியல் காய்ச்சல் ஆரம்பித்துள்ளது.இதனால் தேர்தலைக் குழப்புவதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன.

இரவு வேளையில் வீடுகளுக்குச் சென்றும் பகலில் வீதிகளிலும் நகைகள் அபகரிக்கப்படுகின்றன. 30 வருடம் நாட்டிலிருந்த பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மக்கள் ஜனநாயக சூழலில் சுதந்திரமாக வாழ்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 300 தமிழ் பொலிஸார் நியமனம் பெற்றுள்ளனர்.இதனால் தொடர்பாடல் பிரச்சினை இல்லை. கலாசாரப் பிரச்சினை இல்லை. அனைவரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸார்.

இராணுவம் பல பகுதிகளிலிருந்து மீளெடுக்கப்பட்டது. எனினும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு படையினரின் பாதுகாப்பு வேண்டுமென மக்கள் கேட்கிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இன்று இரவு முதல் (நேற்றிரவு முதல்) படையினர் சைக்கிள்களில் வீதி ரோந்தில் ஈடுபடுவர்.வீடுகளுக்கு செல்ல மாட்டார்களே தவிர சகல பகுதிகளிலும் படையினர் ரோந்தில் ஈடுபடுவர். கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி என்னிடம் ஒன்றை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்புக்கு ஒரு பாதுகாப்பு நடைமுறை யாழ்ப்பாணத்திற்கு இன்னொரு பாதுகாப்பு நடைமுறையில்லாமல் சகல மாவட்டங்களிலும் சட்டம், ஒழுங்கை முழுமையாக அமுல்படுத்தி வன்முறைகள் தடுக்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பான செய்திகளை ஊடகங்கள் மிகைப்படுத்தி வெளியிடுகின்றன.

குறிப்பாக அண்மையில் இரண்டு சிறுவர்கள் காணாமல் போனபோது ஊடகங்கள் கடத்தல் என செய்தி வெளியிட்டன. ஆனால் இரண்டு சிறுவர்களும் திருகோணமலைக்குச் சென்றனர். அங்கு மீட்கப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் சிறு குற்றங்களே நடைபெறுகின்றன. பயங்கரவாதமில்லை. இராணுவ நடவடிக்கை இல்லை. தென்பகுதி மாவட்டங்களைப் போன்று மோசமாக யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் இடம்பெறவில்லை.

எனவே பொலிஸாரும், இராணுவமும் சட்டம் ஒழுங்கை முழுமையாக அமுல்படுத்துவர். எனவே விரைவில் யாழ்.குடாநாட்டில் வன்முறைகள் அனைத்தும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

அதற்காக நான் அனைவரினதும் ஒத்துழைப்பை கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். (ந-5)

# ஐ.நா.நிபுணர் குழுவுடன்...

கூறியுள்ளனர்.

அரசாங்கம் பான் கீ மூனின் ஆலோசகர்களுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தும் எனவும் நிபுணர் குழுவுடன் பேச்சுவார்த்தையை நடத்தாது எனவும் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் போது படைத் தரப்பிற்கு தலைமை தாங்கியவரும், ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய பிரதி வதிவிடப் பிரதிநிதியுமான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந் நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்வதில் தடையில்லை என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன அண்மையில் அறிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் நிபுணர் குழு சாட்சியம் அளிப்பதற்கு எந்தவித தடையும் கிடையாது எனவும் அரசாங்கமும் அறிவித்திருந்தது.

ஆயினும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை விடவும் பரந்தளவில் விசாரணைகளை மேற்கொள்ள நிபுணர் குழு அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்தபோது இதற்கான அனுமதி அரசாங்கத்தால் மறுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் இந்த நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடிபடையவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையானது காலத்தை இழுத்தடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# பொதுமக்...

அறிவித்தால் படையினர் உடனடியாக நடவடிக்கை எடுப்பர்.24 மணி நேரமும் தமது பிரச்சினைகளைத் தெரிவிக்கலாம். இதற்காக யாழ்.மாவட்ட படைகளின் தலைமையகத்தின் 021 222 9693 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

அல்லது பின்வரும் பிரதேச சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவித்தால் படையினர் உடனடியாக நடவடிக்கை எடுப்பர். இவ்வாறு யாழ். கட்டளைத்தளபதி குறிப்பிட்டார் .(தொலை பேசி விபரம் 2ஆம் பக்கத்தில்.) (ந-5)

# இலங்கை அரசாங்கத்தின் செயற்...

இராஜாங்கத்திணைக்களத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரி குரோலி, இவ் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற செயன்முறைகளை அமெரிக்கா ஆதரிப்பதாக பதிலளித்துள்ளதுடன் இச் செயல்முறை இன்னும் இடம்பெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியவர்கள் இவற்றுக்குப் பொறுப்பாளிகள் ஆக்கப்படவேண்டும் என நாம் திடமாக நம்புகிறோம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவது இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மிகவும் அவசியமானது என நாம் நம்புகிறோம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கான எதிர்ப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கைவிட வேண்டும் என அமெரிக்கா கருதினால் ஏன் நீங்கள் அவரைச் சந்திக்கும்படி கோரிக்கை விடுக்கவில்லை என இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற செயல்முறைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். இதில் குறைபாடுகள் ஏதும் இருப்பின் அது குறித்து அரசாங்கத்திற்கு கூறுவதற்கு அமெரிக்கா தயங்காது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரி குரோலி பதிலளித்துள்ளார். (ந-5)

# சுங்கத்...

இவ் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. தபால் அதிபர் எம்.டி.திஸநாயக்க இப் பணியினை சம்பிரதாயமாக ஆரம்பித்து வைத்தார்.

தற்போது கடல் வலயச் சட்டம் நீக்கப் பட்டிருப்பதால் சுங்கத் திணைக்களப் பணிகள் விரிவுபடுத்தப்படும்.அத்துடன் முன்னர் இயங்கிய ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை, காரைநகர், பருத்தித்துறை ஆகிய சுங்கத் திணைக்கள பணிமனைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-5)

# களத்தில் குதிக்கிறது...

யாழ்ப்பாணத்தில் மிகக் குறைவான வன்முறைகளே இடம்பெறுகின்றன.

பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் சகல வன்முறைகளையும் பொலிஸார் முடிவுக்குக் கொண்டு வருவர்.

அண்மையில் சாவகச்சேரிப் பொலிஸாரால் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபருக்கு யாழ்ப்பாணத்தில் 15 வழக்குகள் இருக்கின்றன.

அண்மையில் 5 மாணவர்கள் பெற்றோர்கள் தண்டித்தார்கள் என்ற காரணத்திற்காக வவுனியாவுக்குச் சென்றார்கள்.

ஆனால் ஊடகங்கள் இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் அம்மாணவர்கள் கடத்தப்பட்டனர் என மிகைப்படுத்திச் செய்தி வெளியிட்டன.

தற்போது யாழ்ப்பாணத்தில் சில கொள்ளையர்களிடம் துப்பாக்கி இருக்கிறது.

இதனைக் கண்டுபிடிப்பதற்காக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் 15 விசேட புலனாய்வு அணிகள் யாழ்ப்பாணத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

அத்துடன் அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸார் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தக் கடமையில் ஈடுபடுவர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)


## பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

பின்வரும் துறைகளில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

### பயிற்சி நெறிகள்

❁ ) ஓவ்செற் மெசின் இயக்குதல் [ஆண்கள்]

கல்வித் தகைமை: க.பொ.த (சா/த)
வயது : 21 - 30 வரை

❁ ) கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு [இருபாலாரும்]

கல்வித் தகைமை: க.பொ.த (சா/த)
வயது : 20 - 30 வரை

❁ ) ஊடகவியல் பயிற்சி [இருபாலாரும்]

கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரம் சித்தி
வயது : 20 - 35 வரை

ஆர்வம் உடையவர்கள் தாம் தெரிவு செய்ய விரும்பும் பயிற்சி நெறியை குறிப்பிட்டு, முழுப் பெயர், நிரந்தர முகவரி, தபால் முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இலக்கம், தனிப்பட்டவரா /திருமணமானவரா, தொலைபேசி இலக்கம் ,கல்விப் பெறுபேறுகள் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தை

இணைப்பாளர் - பயிற்சிநெறிப் பிரிவு
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 31.01.2011 இற்கு முன்பாக சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.

## வேலையாட்கள் தேவை

எவவன் ஸ்ரூடியோ அன்ட் வீடியோ நிலையத்திற்கு வேலையாட்கள்தேவை (பெண் பிள்ளைகள்விரும்பத்தக்கது) Photoshop, Video editing தெரிந்தவர்கள். தொடர்பு:-
எவவன் ஸ்ரூடியோ
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
T.P.:0778364786
(த-2248)

விசேட விலைக் கழிவு
உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
DHL WORLDWIDE EXPRESS
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD மற்றும் சகல விதமான பொருட்களையும் மிக விரைவாக அனுப்பிடலாம்
(U.K Special Price - Over the 10kg 600/-

சகல விதமான கணனி உதிரிப்பாகங்களையும் விசேட விலைக் கழிவுடன் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்




## திருமுருகன் கொம் ஹற்

இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல-2b நெல்சன் பிளேஸ் கொழும்பு - 6.
இல- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல- 5, திருநகர் பிரதான வீதி ,கிளிநொச்சி.
இல- 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல- 44, மில் றோட் ,வவுனியா.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.